ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 3—11—46 | இதழ் 27

கல்விமந்திரி, அவினாசிலிங்கம் அவர்கள், தமிழகத்தின பெருமதிப்புக்குரியவரானார், அண்மையில் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்திலே, அவர் அழகு தமிழில், பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்றியதால். உண்மையிலேயே, அந்தச் செயலைக் கண்டு, தமிழன் உள்ளம் பூரிக்கத்தான் செய்வான். மேனாட்டு முறைகளோ, அறிவோ, அமைப்புகளோ அடியோடு கூடாது என்று கூறும் போக்கினரல்ல நாம்—என்றாலும்—இனிய தமிழ்இருக்க, வேண்டுமென்றே ஆங்கிலத்திலேபேசும் போக்கைக் கண்டிக்கிறோம்.

அன்னிய ஆட்சியினால் மனம் மரத்துப் போனதற்கு அறிகுறி, இந்த ஆங்கிலம் பேசவேண்டும் என்ற மோகமும் பிடிவாதமும். அந்தப் போக்கைத்தலிந்த—சொல்லால் அல்ல — செயல் முறையாலேயே — கண்டித்த, கல்விமந்திரியாரை நாம் மிக மிகப்பாராட்டுகிறோம்.

இதுகாங்கிரஸ் மந்திரிசபையின், முற்போக்கான முறை என்று கூறுவர், நமது காங்கிரஸ் நண்பர்கள். அல்ல. காங்கிரஸ் மந்திரிசபை, ஆச்சாரியார் காலத்திலேயும் இருந்தது, அப்போது நடைபெற்ற பட்டமளிப்பு விழாப்பிரசங்கம் தமிழில் அல்ல என்பதைக் கவனமூட்டுகிறோம். பெருமை முழுதுக்கும் உரியவர் கல்விமந்திரி அவினாசி அவர்கள்தான்.

மொழியில் தமிழ் இருந்தது என்பதற்காக, நாம் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம், ஆனால், அவர் தம்முடையசொற்பொழிவின்மூலம், நாட்டுக்குப் பொதுவாகவும், மாணவர்கட்குக் குறிப்பாகவும், காட்டியவழி, வழக்கமாகப் பேசப்படும் உபதேசமாக இருந்ததே தவிர, உருவான வேலைத்திட்டமோ, உடனடி செய்யக்கூடிய முறையோ, மாணவ உலகின் பிரச்னைகளைத் தீர்க்கும் மார்க்கமோ அமைந்ததாக இல்லையே, என்பதை எண்ணும் போது, ஏக்கமடைகிறோம். கல்விமந்திரியார், அழகான இராக ஆலாபனம் செய்துவிட்டு, பாடல் எதுவும் பாடாது போன, வித்வானை அன்று

## புதிய மந்திரி வேண்டும்

★

இருந்து விட்டார். மொழிதமிழ்தான். மகிழ்ச்சியே. ஆனால் வழி என்னவகுத்தார் மாணவர்கட்கு, புதியதிட்டம் எதனை உரைத்தார்? கவலை பிறக்கிறது அந்தக் கேள்வி பிறந்ததும்.

துவக்கத்திலேயே கல்வி மந்திரியார், வழிதவறிவிட்டார். என்ன வென்றால், பேசப்புகுந்த இடம் பல்கலைக்கழகம், என்பதை முக்கியமாகக் கொள்ளாமல், ஸ்தல புராணம் படிக்கவந்தவர்போல — திவ்யக்ஷேத்திரமாகிய சிதம்பரத்தில் வந்துள்ள மாணவர்களே! என்று பேசத் தொடங்கினார். இந்த 'மகிமை'யை இவர் கூறவேண்டுமா—கிருபானந்தர்கள் இருக்கும் போது— அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேசவேண்டுமா, தில்லை நடனசபை அருகேஇருக்கும் போது! நாம் கல்விமந்திரியாரிடமிருந்து ஸ்தலபுராணத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர் துவக்கமே அதுவாகக் கொண்டார்; கொண்டதனால் தான் படிப்படியாக, பல்கலைக்கழகத்துக்குப் பேசவந்திருக்கிறோம் என்ற நினைப்பையும் நழுவவிட்டு 'இதோபதேசப்' செய்யத் தொடங்கி விட்டார். இதுபழம் பாடம், நாட்டுக்கும் சரி, மாணவர்கட்குப் சரி. அவர்கள் எதிர்பார்க்கும் புதிய விஷயம் என்னவெனில், இந்த 'இதோபதேசம்' இன்றும் தேவைப்படும் அளவுக்கு நாட்டிலே இருள்சூழ்ந்திருக்கக் காரணம் என்ன, புத்தருக்ஜீனரும் ஆழ்வாராதிநாயன்மார்களும் விவேகானந்தரும் வடலூராரும், எவ்வளவோ 'இதோபதேசம்' செய்தனரே; செய்தும், நாட்டிலே ஏன் இன்னமும் கேடு மலிந்திருக்கிறது, பேதம் தலைவிரித்தாடுகிறது, பிளவு அதிகப்படுகிறது பேதமை ஆட்படுகிறது என்று அறிய அவாக்கொண்டுள்ளனர். மந்திரியார், இதனைத் [illegible] விளக்க வேண்டும், வழி [illegible] காட்டவேண்டும், இந்தக் கேடுகளை ஒழிக்கும் முறைகூறவேண்டும்.

அச்சம்விடு! என்று கூறினார். மெச்சத்தக்க உபதேசம். ஆனால், "நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்றஉரையைத் தமிழகம் அறியுமே, ஆகவே அவினாசியார் அதனையே கூறவானேன் என்றல்ல நாம் கூறவிரும்புவது. அறிந்தும், இதுநாள்வரை, அச்சம்விடமுடியாத நிலைஏன் இருக்கிறது? கல்வி மந்திரியார், மதிப்புக்குரியவர்; உண்மை; ஆனால் நாமார்க்கும் குடியல்லோம் என்று கூறிய [illegible] தொழுகைக்கே உரியராயினரே, அத்தகையவரின் உபதேசத்துக்குப்பிறகும், ஏன் இன்னமும், அச்சம் நீங்கியநிலை, மக்கட்கு இல்லை?

அஞ்சுவது வேண்டாம், என்றனர் ஆன்றோர்; அச்சம் தவிர் என்கிறது பழமொழி; அவினாசியாரின் அச்சம்விடு, புதுமொழியல்லவே! ஏன், அச்சம் பிடித்தாட்டுகிறது மக்களை? அவினாசியாரின் உரையிலே இதற்கான விளக்கமோ, அச்சத்தை எப்படிப்போக்கிக் கொள்வதென்ற வழிவகையோ கூறப்படவில்லை.

> "நெஞ்சு பொறுக்குதில்லையே
> இந்தநிலை கெட்ட மாந்தரை
> நினைத்துக் கொண்டால், அஞ்சி
> அஞ்சிச்சாவார் அவர், அஞ்சாத
> பொருள் இல்லை அவனியிலே!"

என்று உருக்கமுடன் பாடிச் சென்றார் பாரதியார், அவினாசியாரின் சொற்பொழிவுக்கு, பலப்பல ஆண்டுகளுக்குமுன்பு. ஏன் இன்னமும் அச்சம்பிடித்தாட்டுகிறது மக்களை. அச்சத்தைவிடு என்று கூறினால்— எவ்வளவு தடவைகூறினாலும்— போய்விடுமா, சொன்ன அளவில்.

அச்சம் வரக்காரணம் இன்னின்னவை என்றுகூறி, அவற்றை நீக்கிக்கொள்ளும் முறைகள் இன்னின்னவை என்று வகுத்தாலொழிய அச்சம் எப்படிப்போய்விட முடியும். அடுத்தமுறைஅவருடையசொற்பொழிவு நிகழும்போது, இதற்கான விளக்கம் தருவார் என்று எதிர்பார்க்கிறோம்.

அச்சம் மட்டுமல்ல, மனதிலே தோன்றும் எந்த உணர்ச்சியும், நினைப்பைப் பொறுத்தது; நினைப்பு, அவனவனுடைய நிலைமையைப் பொறுத்தது. அச்சம் நீங்கும் வழி, எந்த நினைப்பு அச்சத்தைத் தருகிறதோ, அந்த நினைப்பு வாராதபடி செய்வதிலும், அத்தகைய நினைப்பைத் தரும் நிலைமையை மாற்றி அமைப்பதிலும் இருக்கிறது. இதுதான் மனோதத்துவ ஆராய்ச்சியை, ஆட்சி முறைக்கும் பயன் படுத்துபவரின் முறை.

அதோ வருகிறான் கந்தன்— ஆள்வலிவுள்ளவன். அந்தவேளை [illegible]—அதன் கிளைகளில் ஒன்றிலே இருபறவைகள்—கண்ணுக்குத் தெரியவில்லை, ஆனால் சிறகை அடித்துக்கொள்கின்றன—அந்தச்சத்தம், கந்தனின் சித்தத்தைக் குழப்புகிறது — அவன் அச்சமடைகிறான்! ஏன்? சத்தத்தைக் கேட்டதும் அவன், நினைப்பு, பிசாசின்மீது சென்று விட்டது! ஏன் அத்தகைய நினைப்பு அவனுக்கு! அவன், பேய் பூதம் பிசாசு ஆகியவற்றை நம்பும் நிலையிலே வளர்க்கப்பட்டிருக்கிறான் — வைக்கப்பட்டிருக்கிறான். இவனுடைய அச்சத்தைத் தீர்க்க வழி என்ன? பேயும் இல்லை பிசாசும் இல்லை என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குவது தான்; வேறுவழி ஏது, வெற்றிகாண விரும்பினால்.

இந்த முறையிலே, அச்சம், ஏற்படும் காரணத்தைக் கண்டறிந்தால், சூழ்நிலை காரணமாகவே, அச்சம் ஏற்படுவதைக் காணலாம்— அந்தச் சூழ்நிலையைத் திருத்தி அமைத்து விட்டால், மனநிலை தானாகமாறும், அச்சம் அழிந்துபடும். அந்தச் சூழ்நிலை மாற்றத்துக்கான, வழிகளைத்தான், நாம் எதிர்பார்த்தோம் அவருடைய சொற்பொழிவில்—கிடைக்கவில்லை.

எவ்வளவு தான் எடுத்துரைத்தாலும், அச்சம் போவதில்லை இந்நாட்டு மக்களுக்கு என்று கூறிவிடமுடியாது. நாட்டிலே

(அடுத்த பக்கம் பார்க்க)

## புதிய மந்திரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

தலைப் போரிலே ஈடுபட்டவர்கள், சட்டம், போலீஸ், ராணுவம், சிறை, தூக்குமேடை போன்ற எதற்கும் அஞ்சாமல் பணிபுரிந்தனர். எப்படிச் சாத்யமாயிற்று! சூழ்நிலையை மாற்றும், பிரச்சாரம் நடைபெற்றது.

நாடு நம்முடையது—நமக்கே ஆட்சி உரிமை—இதற்காகப் போரிடத்தான் வேண்டும்—இத்தகைய போர் பல்வேறு நாடுகளிலே நடைபெற்றது—அஞ்சற்க—வெற்றி நமக்கே—என்று பேசப்பட்டதால், தொப்பி தரித்தவனைக்கண்டு பயந்த நிலைமாறி துப்பாக்கிக்கு மார்காட்டும் மனோநிலை பிறந்தது. அரசியல் காரியத்திலே, அச்சம் ஒழிந்தநிலை ஏற்பட்டது, எனவே, முறைப்படி வேலை செய்தால், சூழ்நிலைமாறும், சூழ்நிலைமாறினால், மனோநிலை திருந்தும், அச்சம் அழிந்துபடும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆம்! ஆனால், இந்நாட்டில் அச்சம், அரசியல் துறையுடன் நின்றுவிடவில்லையே! அங்கொரு பூனை ஓடினால் அச்சம், இங்கோர் கோட்டான் கூவினால் அச்சம், கல்தடுக்கினால் அச்சம், ஐயன்மிரட்டினால் அச்சம், ஆளுடக்காரனின் அர்த்தமற்ற பேச்சுக்கு அச்சம் அவனைத் தொட அச்சம். இவனுடன் கலந்துண்ண அச்சம், இருக்குமா, நடக்குமா, ஆகுமா, என்று எண்ணிப்பார்க்க அச்சம், ஜாதிமுறையில் அச்சம், பொருள் பேதமுறையில் அச்சம், குளத்தில் இறங்க அச்சம், கோயில் நுழைந்தால் கோலெடுப்பரே என்று அச்சம், என்று, எண்ணற்ற முறைகளிலே, அச்சம்பிடித்தாட்டுகிறது இந்நாட்டு மக்களை! இந்த அச்சத்தைப் போக்கினாலொழிய, 'அச்சம் விடு'' என்ற பேச்சை, அவினாசியார் கூறிப்பயன் என்ன?

கோயிலுக்குள் பழங்குடிமகனை நுழையவிட்டால், பாபம் சம்பவிக்கும, நாசம் நேரிடும், மதம் கெடும், மார்க்கம் அழியும், என்றுதான் உண்மைவைதிகன் அச்சமடைகிறான்.

அவனுடைய கோபத்தைக் கிளப்பிவிட்டால் என்ன ஆகுமோ, என்று அச்சம் கொண்டுதான், அவினாசியாரின் அரசாங்கமேகூட ஆலயப் பிரவேசசம் பந்தமாகச்சட்டம் செய்யத்தயக்க மடைகிறது.

வைதிகர்களின் எதிர்ப்பு, அரசாங்கத்தின் நடுநிலைமை, என்பவைகளைக்கண்டு, நாமாக உள்ளே நுழைந்தால், தொல்லை வருமோ, என்ற அச்சம் பழங்குடிமக்களுக்குஏற்படுகிறது.

இப்படிக் கோயிலுக்குள்ளேயும் அனுமதிக்காமல் கொடுமை செய்தால் இந்த மதமே வேண்டாம என்று எண்ணிக்கொண்டு வேறு மதத்துக்குப் போய்விட்டால் என்ன செய்வது என்று இந்து இனப்பற்றுக்கொண்டவருக்கு அச்சம் பிறக்கிறது.

ஆனால், அதற்காக ஆலயத்துக்குள் பழங்குடியினரை நுழையவிட்டால், பழமைமடியுமே, வர்ணாஸ்ரமம் ஒழியுமே, கட்டுக்கலையுமே, அப்போது உயர்ந்த ஜாதிஎன்ற நிலையும், அதனால்கிடைக்கும் உரிமையும் அதன் பலனாக வரும இலாபமும் ஒழிந்து போகுமே என்ற அச்சமும், பிடித்தாட்டுகிறது.

இவ்விதம் அச்சம், ஒரு சாராரைமட்டுமல்லவே, சகலரையும், வெவ்வேறு விதத்திலே பிடித்து ஆட்டத்தான் செய்கிறது. இந்த அச்சம் ஒழியவேண்டுமே. என்ன வழி அதற்கு? சூழ்நிலைமாற்றந்தான் வழி! அதற்கான முறை என்ன? பிரசாரம்! ஏன் அது நடைபெறவில்லை? நடைபெறாததற்குக் காரணமும் அச்சந்தான்! அத்தகைய பிரசாரத்தில் ஈடுபட்டால், எதிர்ப்பு, மக்களிடமிருந்து கிளம்புமே என்ற பயந்தான். ஏகாதிபத்யத்தை எதிர்க்கச் சொன்னபோது எந்த டாக்டர்ராஜனுக்கு மலர் தூவினரோ, அதே டாக்டர், கோயிலைத்திறவுங்கள் என்றபோது, அவர் கண்களில் மிளகாய்ப்பொடியை அல்லவா தூவினார்கள்!!

சமுதாயச்சூழ்நிலையைமாற்றினாலொழிய, மக்களிடை குடிகொண்டுள்ள அச்சம் நீங்காது. சூழ்நிலையை மாற்றப்பிரசாரம் செய்தாகவேண்டும். அதற்குப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களைப் படை திரட்ட வேண்டும்—மந்திரியார் இதனையேவலியுறுத்தி இருக்கவேண்டும்மாணவரிடம்.

''சொல்லலாம்! ஆனால் அது கடைசியில் சூன்யமான பேச்சாகப்போய்விடுமே'' என்ற அச்சம் அவினாசியாருக்கு! எனவேதான் சூட்சமத்தைக்கூறாமல், சுகப்பிரம்மர், பதஞ்சலி, தாயுமானார் போன்றவர்களின் முறைப்படி உபதேசமுறையைக் கையாண்டார். அச்சம் தவிர்! என்று அவினாசியாருக்கு நாம் கூறுகிறோம் அன்புடன்.

சூழ்நிலையை மாற்றுவதற்கு அவசரமும், அவசியமும், இன்று இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. எனவேதான், இந்த முக்கியமான அலுவலை, ஆள்பவர்கள்மேற்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

பாதைகளைத்திருத்தி அமைக்க மந்திரி உண்டு; வைத்ய முறையைச்செம்மைப்படுத்த மந்திரி உண்டு; காட்டு இலாக்காவுக்கு மந்திரிஇருக்கிறார்; மீன் இலாக்காவைக்கூட ஒருமந்திரியைக்கவனிக்கச்செய்கிறார்கள்; ஆனால்யாருக்காக நாடு இருக்கிறதோ, அந்தச் சமுதாயத்தின், சூழ் நிலையை மாற்றி அமைக்க ஒரு மந்திரி இல்லை!

போரின் காரணமாகக் கட்டிடங்கள் நாசமாகிவிட்டால், புதிய விடுதிகளை அமைக்கும் இலாக்கா ஏற்படுத்தி, அதனைக் கவனிக்க ஒருமந்திரியை நியமிக்கிறார்கள். இங்கோ ஒன்றரை நூற்றாண்டாக அன்னிய ஆட்சியால்தாக்குண்டு, அதற்குப்பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, வைதிகத்தால் தாக்குண்டு, சமுதாயத்தின் மனநிலை, இடிந்தகட்டிடமாகிக்கிடக்கிறது—அதிலே குப்பையும் கூளமும் குவிந்து கிடக்கிறது—இதனை நீக்கிப் புதிய மனநிலையை ஏற்படுத்த வேண்டிய பணி, மிக மிக முக்கியம். இதற்கெனத்தனியாகஒரு மந்திரி இருக்கவேண்டும். அவருடைய வேலை, நாட்டிலே உள்ள நானாவிதமான சமுதாயக் குறைபாடுகளைக் கண்டறிந்து, அவைகளைப்போக்கத் தீவிரமான பிரசார ஸ்தாபனம் அமைத்து, அதிலே கலந்துபணிபுரியும்இயக்கங்களைத்திரட்டி, சூழ்நிலையை மாற்றி அமைக்கும்காரியத்தைச் செய்தாகவேண்டும். சமுதாய சீர்திருத்த மந்திரி ஏற்படாக வேண்டும். அவருடைய திறமையின்பயனாகக்கல்லூரிகளிலேயும், வேறு இடங்களிலேயும். இந்த மகத்தான பணிபுரிய ஆர்வம் கொண்டுஉள்ளவர்களைக் கண்டறிந்து, பயன்படுத்தி, தக்கபிரசாரமுறைமூலம், பணிபுரிய வேண்டும். கல்விமந்திரியார், இத்தகைய கருத்தைக்கூர்ந்து கவனிக்கவேண்டுகிறோம். ஏனெனில் அவர் நெஞ்சார அறிவார், வேவலுக்கு அஞ்சாத வேலன், வேலியோரத்தில் காவல் செய்வதாக அவன் கருதிக்கொண்டிருக்கும் முனியாண்டிக்கு அஞ்சி அஞ்சிச் சாகிறான். அந்த அச்சம், சமுதாயத்தின் சக்தியை, உள்ளிருந்தே அரித்து விடுகிறது. அது நீக்கப்பட்டாகவேண்டும்.

புதிதாக நியமிக்கப்படவேண்டும் என்று நாம் கூறுகிறோமே, சமுதாய சீர்திருத்த மந்திரி, அவருடைய அழைப்புக்கு பல்கலைக் கழகங்களிலே படித்துப்பட்டம் பெறவிரும்பும் மாணவர்கள் நிச்சயமாக வருவர் — கட்டாயச் சட்டமும் இன்றி—தேவை என்றால் கட்டாயப்படுத்தவும் செய்யலாம். இந்த அறிவு தரும் படையை அமைச்சர் பயன்படுத்தி, அச்சத்தை வெல்லமுடியும், சமுதாயத்தில் ஆண்மையை வளர்க்கமுடியும்.

''கிராமச்சர்வ கலாசாலை'' என்றார் ருசிகரமான வார்த்தையை அவர் கூறினபோது, அவினாசியார், நாம் மேலேகுறிப்பிட்ட, சமுதாயச்சீரமைப்புக்குத் தான் வழி கோலுகிறார் என்று எண்ணினோம்—ஏமாந்தோம்.

சர்வகலாசாலைகளிலே இருக்கும் இட நெருக்கடியைச்சமாளிக்க அவர் காணும் குறுக்கு வழி இது என்றுதோன்றுகிறது. நோக்கமும் தவறு; முறையுந் தவறு.

சர்வகலாசாலைகளுக்கு வராமலேயே, உயர்தரப்படிப்புப்படித்துத்தேறிய வாலிபர்கள், தபால் மூலமாகச், சர்வ கலாசாலைப் படிப்புப்பெறலாம்என்று மந்திரியார் யோசனை கூறியிருக்கிறார். நமக்குச்சிரிப்பு வரவில்லை. காரணம் நகைப்புக்குஇடமானதல்ல இந்த யோசனை என்று நாம் கருதுவதால் அல்ல, இதைவிட வேடிக்கையான முறையை, முன்பு அரசாட்சி செய்த ஆச்சாரியார் சொல்லக்கேட்டதால், இந்த மந்திரியாரின் பேச்சைக் கேட்டுச்சிரிப்பு அவ்வளவாக வரவில்லை. இவராவது தபாலில் சர்வகலாசாலை அமைக்கிறார்—ஆச்சாரியார், ஊர்க்கோடியிலே உள்ள மரங்களிலே, போர்டுகளை மாட்டி, உழவுக்கோ, உலவவோ, காலைக்கடனைக் கழிக்கவோ, காளையைத் தேடவோ போகும் போது, போர்டுகளைக் கண்டு, என்ன என்று கேட்டுத், தெரிந்தவர்கூறக்கேட்டு, தெளிவுபெற்றுச் சுலபத்திலே கிராம மக்கள் படித்தவராகலாம் என்றதிட்டத்தைக் கூறினார். அதைவிட அவினாசியாருடைய திட்டம் வேடிக்கையானதல்ல. தபால் மூலமாகச் சர்வகலாசாலைப் படிப்பாம்—அது கிராமச் சர்வ கலாசாலையாம்!!

முடியுமா என்பது இருக்கட்டும் ஒருபுறம்—முறையின் இலட்சணத்தையே பாருங்கள் யோசித்து.

சர்வகலாசாலைக்குப் போகக்கூடிய அளவு, படித்துத்தேறியவர்களுக்கு, தபால்மூலம் சர்வகலாசாலைப்படிப்புப் போதிக்க விரும்புகிறார் மந்திரியார் — சரி! தபால்கள் எங்கே அனுப்பப்படும்? கிராமங்களுக்கு! சர்வகலாசாலைப்படிப்பு பெறவேண்டிய அளவு பக்குவம் பெற்ற வாலிபர்கள், கிராமங்களிலே இருப்பதாகஅவருடையநினைப்பு! பத்தாவது தேறிவிட்டு, மாணவர்கள் கிராமத்திலேயே இருக்கிறார்களாம்!! உண்மை நிலைமை அதுவா? யோசிக்க வேண்டுகிறோம். கிராமங்களிலே உள்ளவர்கள், பலர் படிப்புப் பெறாதவர்கள், சிலர் படித்ததை மறந்தவர்கள், பெரும்பாலானவர்கள் ஆறாவது ஏழாவது வகுப்பையும் காணாதவர்கள். சிலர் பத்தாவது தேறியிருப்பர், ஆனால் அவர்கள் கிராமத்தில் இரார்! அவினாசியார் அன்புடன் அனுப்பும்கடிதத்தை மணியகாரரிடம்கூறி, பட்டணத்தில் இருக்கும் மகனுக்கு, கிராமத்தில் இருக்கும் தந்தைதிருப்பி அனுப்பவேண்டும்! இதுதான் நடக்கும்.

பெயர் வைத்துவிட்டார் கிராமச்சர்வகலாசாலை என்று! கிராமங்களிலே ஆரம்பப்பள்ளிகளும் சரியாக இல்லை—இருக்கும் பள்ளிக்கூடங்களில் ஒழுங்கும் பயனும் குறைவு—நடத்தும் ஆசிரியர்களுக்கோ அல்லல் அதிகம்—ஆறுமைல் பத்துமைல் நடந்து சென்றால்தான் ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை படிக்க வசதி—இந்நிலையில் கிராமங்கள் இருக்க, பத்தாம்வகுப்பு வரையிலே படித்துத்தேறிவிட்ட மாணவர்கள், ஏராளமானவர்கள், என்ன செய்வதென்றுதெரியாமல், கிராமங்களிலே இருப்பதாக எண்ணிக்கொண்டு, மந்திரியார், கிராமச்சர்வ கலாசாலை அமைக்கிறேன் என்கிறார், நமது ஆழ்ந்த அனுதாபம், அந்தக்கரு

(8-ம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு

10–11–46ல் வெளி வரவேண்டிய "திராவிடநாடு" அச்சகத்திருந்தம் காரணமாக நிறுத்தப்பட்டு, 17—11—46 அன்று வெளிவரும்.

அந்த இதழ், புதியவடிவிலும், சோவியத் [நவம்பர்] புரட்சி சம்பந்தமான விசேஷ கட்டுரைகளுடனும் வெளிவரும். விலை 4, அணு.

ஏஜண்டுத் தோழர்கள், காப்பிகள் கூடுதலாகத் தேவையானல் 10—11—46–க்குள் தெரிவித்து விடக்கோருகிறோம்.

# திராவிட நாடு

காஞ்சி] 3—11—46 [ஞாயிறு

## இடந்தேடிகள்!

★

"முதலியார் ரொம்பநல்லவர்; தர்மிஷ்டர்; நிர்வாகத்திறமையும உண்டு, அதைஎல்லாம் இல்லை என்று சொல்லவில்லை; அவர் தங்கமானவர்; ஆனல், காங்கிரஸ் கட்சியின் கீர்த்திகுப் பங்கம் வரப்படாது பாருங்கோ; என்னையோ காங்கிரஸ் அபேட்சகனகத்தேர்ந்தெடுத்துவிட்டார்கள். காங்கிரசின் கீர்த்தியைக் காப்பாற்றவேண்டியபொறுப்பு எனக்குவந்து சேர்ந்திருக்கு; ஆகையினலேதான் நான முதலியாரை எதிர்க்கவேண்டி இருக்கேஒழிய, வேறன்னசார்.என்னையுபாக்கவேண்டாம், அவரையும் கவனிக்கவேண்டாம், காங்கிரசைக் கவனியுங்கள்சார். அது தான் நான்சொல்ற விஷயம்"

காங்கிரஸ்
அபேட்சகர்.

"என்னையா செய்யறது! எதிர்த்து நிற்கறதுன்னு ஆரம்பிச்சபிறகு, ஏதாவது ஒருகட்சிப்பேரைச் சொல்லித்தானே ஆகணும்! அவனுங்கக்கூட்டம் போட்டுக் காங்கிரஸ் காங்கிரசுன்னு பேசறுங்க. நாப்பளும் ஏதாவது கூட்டம் போட்டாக வேணுமில்லோ? கூட்டம்னு போட்டா, வேறே எதைப் போடறது? ஜஸ்டிசுதான். அதனுலே அந்தக் கட்சின்னுசொல்லிக்கொள்ள வேண்டிஇருக்கு. இல்லேன்னு, நமக்கென்னய்யா கட்சியும் கத்தரிக்காயும். இப்ப நான் என்ன காங்கிரசு, கெட்டுப்போன கட்சின்னு சொல்றேன்? என்னமோ அது நமக்குப்பிடிக்கலே, அவ்வளவுதான். எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறேன் இந்த ஜனங்களுக்கு ஒரு ஓட்டுகொடுக்காத போயிடுவாங்களா? இல்லேய்யா நானே தான் கேட்கறேன், காங்கிரஸ் பெரியகட்சியா இருக்கட்டும். அந்த ஆள், எப்படிப்பட்டவன் எத்தனைகாலமாக உங்களுக்குத் தெரியும், என்னைவிட எந்தவிதத்திலே, அவன் சிறந்தவன்,சொல்லுங்க கேட்போம். இதோபாரு, என்னமோ கட்சி கட்சின்னு பேசிகிட்டு, நல்லவங்களுக்குத் துரோகம் செய்யாதே. அவ்வளவுதான் நான் சொல்றது. நீ காங்கிரஸ் கட்சிதான பெரிசுன்னு, நினைத்துகொண்டா அப்படியே சொல்லிக்கோ, நம்மைமட்டும் மறந்துடாதே, ஓட்டு போட்டுடு. உனக்கு நான் உபகாரம் செய்யாமே இருந்ததில்லை, இதுவரைக்கும் உன்னை நான் வாய் திறந்து ஒரு உபகாரமும செய்யச் சொல்லிக் கேட்டதில்லே."

ஜஸ்டிஸ் அபேட்சகர்,

தேர்தல்காலத்திலே, நீங்கள் சர்வசாதாரணமாகக் கேள்விப் படக்கூடிய பேச்சு இது.

காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிற்பவர், தன்கட்சியை முன்னலே நிறுத்திப் பேசுவார்—தனக்கல்ல மரியாதை, கட்சிக்கு என்பதை வலியுறுத்துவார்—கட்சிக்காகவே தான் நிற்பதாகச் சொல்வார்—கட்சியின் மதிப்புக்காகவே பாடுபடுவதாகச் சொல்வார்.

இதுவா முக்கியம், ஆளின் யோக்யதாம்சம், திறமைதகுதி இவைகளை அல்லவா கவனிக்க வேண்டும் என்று கேட்பர். அது ஓட்டர்கள் கவனிக்கவேண்டிய பிரச்னை—ஆனல் ஒன்றுமட்டும் மறுக்கமுடியாது, அபேட்சகர்கள் என்று நிற்பவர்கள், தாங்கள் எந்தக் கட்சியின் சார்பிலே நிறுத்தப்படுகிறுர்களோ, அதனுடைய சேவைக்காகவே இருப்பதாகச் சொல்வது, ஓட்டு பெறும் தந்திரமாகக்கூட இருக்கலாம், ஆனல், கட்சிப்பற்றை அவர்கள் காட்டும் விதம் இருக்கிறதே, அது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

அதேபோது, இதர கட்சிகளின் சார்பில் நிற்பதாகக்கூறிக் கொள்கிறுர்களே அவர்கள்,தங்களை முன்னலே நிறுத்திப் பேசுவார்களேயொழிய, கட்சியைப் பற்றிப் பேசமாட்டார்கள்—பற்றும் காட்டமாட்டார்கள்—கட்சியை நேசிக்கக்கூட மாட்டார்கள். இத்தகையவர்கள், தேர்தல் காலத்துக்காளான்கள்—அதே போது—அவர்களே கட்சிக்கரையான்களாகவு மாகிறுர்கள—ஜெயித்தாலும் தோற்றாலும்.

கட்சிக்காகத்தான் நான்என்ற காங்கிரஸ் காரர் மார்தட்டும் வீரம் போல, இவர்களிடம் கட்சிப் பற்று இருப்பதில்லை—கட்சியினிடம், தொடர்போ, கட்சித் தொண்டர்களிடம் ஈரமோ கொள்வதில்லை. இவர்கள், மின் மினி போலத் தேர்தலின்போது தோன்றி, தோன்றி மறைவதற்குள் தங்கள்போக்கினுலேயே, கட்சித்தொண்டர்கள் கஷ்டப்பட்டு ஏற்றிவைத்த கொள்கை விளக்கைக்கூட அணையும்படிச்செய்துவிடுபவர்கள்.

எனவேதான், உண்மைக்கட்சித்தொண்டாற்றுபவர்களின் தொகை அதிகரித்ததும், இத்தகையவர்களின் தேர்தல்கூத்துக்குக்கட்டியம் ஆடும் வேலை நமக்கு இருத்தலாகாது, என்று சேலம் மாநாட்டிலேதீர்மானிக்கப்பட்டது. நமக்குக "காங்கிரஸ் எதிரிகள்," "சவர்மெண்டு நண்பர்கள்" என்று பட்டமேதங்களைக்கூறிப்பூரிக்கும் பிரமுகர்களின்" கூட்டுறவு வேண்டாம் என்று சேலம் முடிவுசெய்தது விட்டது.

தேர்தலையும், கட்சிக்கு ஆற்றும் தொண்டுகளிலே ஒன்று, கொள்கையைப்பரப்பும் முறைகளிலே ஒன்று, கொள்கையின்படிக்காரியமாற்றும் இடத்துக்குச்செல்லும் பணி, என்றமுறையில்கருதுபவர்களின் தொகை இன்னும் வளர வேண்டும் — திடீர்காதலர்கள்— நெருக்கடியால் நண்பர்கள் – அவசரத்தில் அன்பர்கள்–வந்து சேர்ந்தவர்கள்–கண்டுபிடிக்கப்பட்டவர்கள்–என்ற முறையிலே, நமக்குப்பலர் இருந்தனர்–தேர்தல் வேலை இல்லை என்ற உடனே அவர்கள் இல்லை–நமக்கும்பலன் இல்லாப்பாடு இல்லை–கொள்கையில்லாக்கும்பல் இல்லை.

முன்பு நமக்கு இருந்தது போன்ற சங்கடம் இன்று காங்கிரசுக்கு வந்திருக்கிறது. அங்குதான் இப்போது, கள்ளமார்க்கட்டுக்காரர்,கலெக்டர் துரைக்கு நண்பர்கள்–கதர் கட்டக்கற்றுக் கொண்டவர்கள் — சத்யாக்கிரகத்தைக் கலகம் என்றவர்கள்—ஆகிய 'ரகங்கள்' சேருகின்றன, தேர்தலுக்காக.

தாராளமாகப் போகட்டும், ஆனல் அங்கே உள்ளஉண்மைக் கட்சித் தொண்டர்கள், நெடு நாட்களுக்கு, இந்த 'இடந்தேடிகளை'விட்டுவைக்கமாட்டார்கள். அங்கேயும் உழைப்பவன் உரிமையை உரத்தகுரல்காரன்பறித்துக்கொள்ள இடந்தரும்போக்கு நெடுநாளைக்குஇருக்கமுடியாது. இங்கிருந்து அங்கு சென்றுள்ளவர்களின், கதர்சட்டை பழசாகுமுன்பு, அவர்களின் காதலுக்கு முறிவு ஏற்படும்—ஏற்படத்தான் வேண்டும்—ஏனெனில் இங்கும்சரி, அங்கும்சரி, எந்தக் கட்சியிலும்சரி, குறிப்பிட்டகொள்கைகளுக்காக வாழ்பவர்கள்,உழைப்பவர்கள்,கஷ்டநஷ்டம் ஏற்பவர்கள், மதிக்கப் படவேண்டுமே ஒழிய, மேனமினுக்கிகளிடம், நிர்வாகக் காரியத்தைத்தரும்போக்குஇருக்கக் கூடாது.

"நேற்று, அர்ச்சகர் நமது ஜெமீன்தார் வீட்டுக்கு வந்தார்—ஜெமீன்தார் அந்த ஆள்வருவது தெரிந்து— வேண்டுமென்றே—அவன் முகம் செத்தப்போகும்படி இந்தப்பாப்பான்களை நம்பவேகூடாது என்று சொன்னர்" என்றுகூறி நாம், அல்ப சந்தோஷப்பட்டதுண்டு; அந்த ஜெமீன்தார்தமிழருக்காகஉயிரைவிடுபவர் — பார்ப்பனீயத்தை அறவே வெறுப்பவர் — என்று நம்பி. கொஞ்சநாளைக்கெல்லாம், தெரிந்தது அர்ச்சகரை அவர்கண்டித்தது, நமது முகத்தைத் துடைக்கவேயொழிய, உண்மையில் கோபம் கொண்டல்ல என்பது. சேலம் மாநாடு கடைபெறும்வரையில் 'பாசம்' கூசலாடிக்கொண்டேதான் இருந்தது. வருகிறபழி வந்து சேரட்டும் என்று வாலிபர்கள் துணிந்தனர், அந்த "வாய்வீரர்கள்" விரட்டப்பட்டனர்.

"கலெக்டர் வரப்போவது தெரியும் சார்; தெரிந்து,அன்றையத்தினமாகப்பார்த்து, மோட்டாரில் புதிய கதர்கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு தான், நம்மடவுன் காங்கிரஸ் கமிட்டி பிரசிடெண்ட் போயிருந்தார் கலெக்டரைப் பார்க்க" என்று கூறி இன்று களிக்கும்காங்கிரஸ் வாலிபர்கள், கொஞ்ச நாளில், "சேலம்" அவர்கள் கட்சிக்கும் தேவை என்பதைஉணரப்போகிறுர்கள்.

அது சரி சார்! இப்படி அவர்களை இங்கேயும் இருக்கக்கூடாது, அங்கேயும்தங்ககூடாது என்று விரட்டியபடி இருந்தால் அவர்கள்போகிற இடந்தான் என்ன? என்று கேட்பீர்கள். எந்த இடம் போவதானுலும் சரியே, ஏதாவதுஒரு கொள்கையில் உண்மையான, உறுதியான சுயநலமற்ற, பற்றுகொண்டு வாழவேண்டும் அவர்கள். அப்போதுதான், பொது வாழ்வு தூய்மையுடையதாக, இல்லையெனில், எத்தனையோ சுறண்டல் ஸ்தாபனம்போல, பொதுவாழ்வும் கொள்கைப்பற்று கொண்டவர்களை, கொள்கைக் கடைவைத்து நடத்தும் சுயநலக்காரர்கள் சுரண்டும்முறைகொண்ட ஸ்தாபனமாகிவிடும்.

காங்கிரசின் பேரால், சட்டசபைகளிலே அங்கம்பெற்றுள்ள பல 'தொண்டர்களைப் பற்றி,' அங்கே உள்ள கொள்கைக் கடைக்காரர்கள் எவ்வளவுதாழ்வாகப்' பேசுகிறுர்கள், என்பதைத்தெரிந்துகொள்ள,கொஞ்சநாளாகும். அந்தநாள், அங்கும் சேலம் நடக்கும். இது வீண் பேச்சு என்று, கருதுபவர்களுக்கு, ஒரு உதாரணம் தருகிறேம். தஞ்சாவூர் ஜில்லாவில் உப்பு சத்யாக்கிரகம் நடந்தது, அப்போது, வடபாதிமங்கலம் மிராசுதார் தியாகராஜன் அவர்கள் எங்கேஇருந்தார்? ஆகஸ்ட்டு இயக்கத்தின்போது என்ன செய்துகொண்டிருந்தார்? இப்போது அவர் காங்கிரசில் சேர வருவானேன்? அவர் இல்லாததால், காங்கிரசின் கரம் வலிவு இழந்துவிட்டதா? அல்லது திடீரென்று அவருக்குத் தேசபக்தி வந்துவிட்டதா! ஏன் அவர் காங்கிரசில் சேர்ந்தார்?

காங்கிரசில் உள்ளஉண்மைத் தொண்டர்கள், சூட்சமத்தைத் தெரிந்துகொள்ளாமலா இருப்பார்கள்? புதியஇடம்,நல்லபலன் தருமென்று எதிர்பார்த்து வடபாதிமங்கலத்தார்,தலைமைஇடம் தேடப்போகும்போது ஒன்று, தொண்டர்களின் உழைப்பு சுறண்டப்படவேண்டி வரும், அல்லது 'சேலம்' வந்தாகவேண்டும், வேறு என்ன மார்க்கம் இருக்கிறது. எனவேதான். பொதுவாழ்வு கொள்கைக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## இடந்தேடிகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வேலை செய்பவர்களுக்கேயொழிய, காற்றடிக்கும்பக்கம் சாய்பவர்களுக்கு அல்ல என்பதைச்செயலளவில் காட்ட வேண்டும் என்று கூறுகிறோம்.

கொள்கையில் உறுதி இருந்தால்தான், இடம் கிடைக்கும் பொதுவாழ்வில் என்பது, திட்டமாகத்தெரிந்துவிட்டால், 'இடந்தேடுபவர்கள்' ஒன்று விலகிவிடுவர் பொதுவாழ்க்கையைவிட்டு, அல்லது இருதயபூர்வமாக எந்தக்கொள்கை தமக்குப்பிடிக்கிறதோ அதனை வளர்க்க முற்படுவர். அப்போதுதான் பொதுவாழ்வு, புனிதபூமியாகும்.

கொள்கைக்காகக் கட்சியில் இருக்கிறார்களா, ஒருகட்சியில்இருக்கிறோம், இருப்பதற்காக அந்தக் கொள்கையைப்பேசித் தொலைப்போம் என்று இருக்கிறார்களா, என்ற 'விஷப்பரீட்சை' தான்நாம் சேலத்தில் நடத்தியது.

இப்போதுஇருப்பவர்கள், தேர்தலைமட்டுமே கட்சிவேலை என்று கருதுபவர்கள் அல்ல-சிலகொள்கைகளுக்காக உள்ளவர்கள். அவர்களால், தேர்தல் யந்திரத்தைக்கைப்பற்றவோ, பிரசார யந்திரத்தைப் பலப்படுத்தவோ, துரிதமாக முடியாது — ஆனால் அதற்காக அவர்கள் ஆயாசப்படுபவர்கள் அல்ல.

அத்தகைய நண்பர்கள், சட்டசபைக்குத்தான் வேண்டாம் என்றீர்கள்— முனிசிபல், ஜில்லா போர்டு விஷயமாக என்ன முடிவு செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர். 'விடுதலை' அதுபற்றி தலையங்கம் எழுதி இருந்தது.

ஸ்தலஸ்தாபனங்களாகிய, ஜில்லாபோர்டு, முனிசிபாலிடி, முதலியவைகள், கட்சிப் பூசலுக்கான இடமல்ல.

குறிப்பிட்ட ஒருசட்டத்தின் கீழ்தரப்படும் குறிப்பிட்ட சில அதிகாரங்களை, நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நடத்திக் கொண்டுவருவதைக்கண்காணிக்கும் இடம். இங்கு கட்சிகள் போட்டியிட்டு, சம்பந்தமற்ற சச்சரவுகளுக்கு இடமாக்கிக் கொள்வது, கூடாது என்பதே நமது கொள்கை, நெடுநாட்களாகவே.

காங்கிரசிலோ, வேறுகருத்து. அவர்கள் கட்சி முறையிலேயே தேர்தலை நடத்த முற்பட்டுள்ளனர். சக்தியும் சௌகரியமும் உள்ளவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் டில்லி முதல் குப்பம்வரை, தங்கள் கரம் வலுக்கவேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் இதன்விளைவு என்ன ஆகும்? நாம்மேலேகுறிப்பிட்ட இடந்தேடிகளுக்குக்காங்கிரஸ் இரையாகிறது. இதன் முழுவிளைவு தெரிய நாளாகும்— ஆனால் நிச்சயமாகத் தெரியும் ஒருநாளைக்கு.

நாம் விரும்புவதும், யோசனையாகக்கூறுவதும், முதலில், இந்த இடங்களைக் கட்சிக் களமாக்குதல்கூடாது என்பதுதான். அப்படியானால் போட்டியே கூடாதா என்று கேட்கப்படலாம்; யாருக்குச்செல்வாக்கு இருக்கிறது, ஊரில் யார் 'பெரியமனுஷர்' என்று உலவுகிறார்களோ அவர்களிடமே விட்டுவிடவேண்டுமா என்று கேட்கப்படலாம். அல்ல—நிச்சயமாக அந்தஇடங்கள் கண்டவர்களிடம் விட்டுவிடக்கூடியதமல்ல — அது ஆபத்து—ஆகாது.

வேறுமுறை என்ன? என்று கேட்பர். இருக்கிறது.

இந்த இடங்களுக்கு என்று, திட்டம்— கொள்கை—ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் இதிலே அமரவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். பொதுமக்களிடம் கட்சிப்பிரதாபம்—காந்தியாரின் மகிமை — ஜவஹரின் வீரம்—அருணாவின் புரட்சிஆகியவற்றைக்கூறி, 'ஆகாவழிகள்—' அந்தர்பல்டிக்காரர் 'ஆகியோருக்குப்பிரைஸ்' விழும்படிச் செய்யும்முறையைவிட்டு விட்டு, நாங்கள்போனால் இன்னின்ன காரியம் செய்வோம் — எங்கள் நிர்வாகத்தில் இன்னின்ன புதுமுறை இருக்கும் என்று விளக்க வேண்டும். இப்படி இரண்டு அல்லது மூன்று தனித்தனிகட்சியினர், கூறும் திட்டத்தை மக்கள் பரிசீலனை செய்து, எந்தத் திட்டம் சரி என்று படுகிறதோ அதை ஆதரிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்போதுதான், உண்மையான வேலை அங்கு நடைபெறுமேயொழிய, வேறுமுறை பயன் தராது—இதுவரைதந்ததுமில்லை.

“இடந்தேடிகள்” கூடாது என்பதற்காக, ஆங்காங்கு காங்கிரஸ் இளைஞர்கள் பலர், தத்தமது வட்டாரத்தில் தேர்தலுக்கு ஆள் தேர்ந்தெடுக்கும் கமிட்டியில், போரிட்டிருக்கிறார்கள். வெற்றி கிட்டிற்றோ இல்லையோ, அதுவல்ல முக்கியம் — மனப்பான்மை மாறுகிறது என்பதே இதிலே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

ஒரு நகரில், ஆகஸ்ட்டுஇயக்க காலத்திலே, காங்கிரசிலே தாங்கள் இருக்கப்போவதில்லை என்றும், நகரசபை விவகாரத்திலே, 'எதிர்க்கட்சியாருடன்' சேர்ந்து வேலை செய்வதாகவும், மன்னிப்பு எழுதிக்கொடுத்துவிட்டு, புதிய கூட்டுறவு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட, பலர் இன்று காங்கிரஸ் அபேட்சகர்களாக முன்வருகின்றனர். கமிட்டியில் எதிர்ப்பு தான்— இருந்தால் என்ன என்கிறார்கள், இந்த இடந்தேடிகள். நாம்இத்தகைய இடந்தேடிகள், நகரசபைகளில் மட்டுமல்ல, பொதுவாழ்வுத்துறையிலேயே இருக்கக் கூடாது என்று கூறுகிறோம். ஒவ்வொரு கட்சியிலும் உள்ள. பொதுப்பணி நோக்குடைய தீவிர இளைஞர்களிடம் தான், 'சாவி' இருக்கிறது.

“என்வார்டு வரையிலே போட்டி போடுவதில்லை—அப்படி ஆள்நிற்கவைப்பதானாலும், ஒப்புக்கு யாரையோ ஒரு பிடி ஆளைப்பிடித்துப் போடுகிறோம் என்று காங்கிரஸ்கமிட்டித் தலைவரே என்னிடம்கூறி விட்டார். எப்படியும் நான் ஜெயித்துவிடுவேன்—பயமில்லை” என்றுகூறும் பிரமுகர்கள் நமக்குத்தெரியும். அவர்களெல்லாம், ஊரிலே திருவிழாநடக்கும்போது வைதீகர்கள், பெரியார் விஜயத்தின் போது சுயமரியாதைக்காரர்கள், காங்கிரஸ் மந்திரிவரும்போது தேசபக்தர்கள், கலெக்டர் வரும்போது ஆங்கில ஆட்சியின் நண்பர்கள், இப்படி 'தசாவதாரம்' எடுப்பர் ஒரே நோக்கத்துக்காக; அந்த நோக்கம், சுயநலம், சுயசுகம் தேடிக் கொள்வதுதான்.

முனிசிபல் நிர்வாகக்காரியத்தைக் கவனிக்கும் போதுகூட, ஆள்கிற கட்சி, எதிர்க்கட்சி என்றமுறை, கேவலம் பேரம்பேசிக் கொள்வதில் போய்முடிகிறதே தவிர, குறிப்பிட்ட கொள்கை, தெளிவானதிட்டம்ஆகிய விதத்தில் இருப்பதில்லை.

“காங்கிரசாரேதான் மெஜாரடியாக இருக்கட்டுமேப்பா!! கமிஷனர் நான் சொல்கிறபடித்தான் கேட்பார்” என்று பேசும், எதிர்க்கட்சி அங்கத்தினர் இருப்பார்; அதுபோலவே, கவுன்சிலில் மெஜாரடி வேறுகட்சியிடம் இருந்தால் “நான் மேல் இடம்போய், நம்மமருமானுக்கு அண்ணன் சம்பந்திதானே லோகல்போர்டு ஆபீசர், அவராண்டெ ஒரு வார்த்தை நம்ம அலமுவைவிட்டுச் சொல்லச் சொல்லி, இந்த ஆர்டரையே கான்சல் செய்து விடுகிறேன் பார்” என்று பேசும் காங்கிரசாரும் இருப்பார். இதற்குப் பெயர், பொதுமக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியாம்! ஏன் இந்தப்போலிகள்? எதற்காக இந்த வீணாட்டம்?

கவுன்சில் கூட்டத்துக்கு முன்பே, 7-லிருந்து 9-வரை, நான் ஓட்டுகொடுத்து விடுகிறேன், ஆனால் பதினாலாம் அயிட்டம் இருக்கிறதே, அது நம்ம பாலகிருஷ்ண முதலியாரைப்பொறுத்தது, அவர் நம்மநாயுடு விடமும் சொல்லி இருக்கிறாராம், அந்தஒரு அயிட்டத்தை மட்டும் விட்டுவிடுங்கள்” என்ற மெஜாரிடிகட்சியிடம் 'பேரம்' பேசிக் கொள்வதும் உண்டு.

மெஜாரடிகட்சி, நிர்வாக சம்மந்தமாகவோ, திட்டத்தைப்பற்றியோ, பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதும் கிடையாது—நடையாகநடந்து ஓட்டு வாங்கியானபிறகு.

அது போலவே, “மெஜாரிடிகட்சியின் திட்டத்தாலோ, நிர்வாகத்தாலோ, இன்னின்ன கேடுகள் உள்ளன, அவைகளை நான் கவுன்சிலில் இன்னின்ன சொல்லித் தடுத்தேன், எதிர்த்தேன்” என்று பொதுமக்களிடம் விளக்கும் வேலையை, மைனாரடியாக இருக்கும் எதிர்க்கட்சிக்காரரும் செய்வதில்லை. ஏதோ ஒருகலியாண வீட்டுக்குப் பல திறப்பட்டவர்களும் போய், வேடிக்கையாக இருந்துசாப்பிட்டுவிட்டு வருபவர்கள் போலவே, கவுன்சில் கூட்டத்துக்கு இருதரப்பினரும் போய் வருவார்களேயொழிய, திட்டம் இருக்கிறது அதன்படிவேலை செய்கிறார்கள்; அந்தத் திட்டத்தில் இன்னகுறை இருக்கிறது அதனை எதிர்க்கட்சியார் எடுத்துரைக்கிறார்கள் என்ற மக்கள் நம்பும்படியான காரியம் நடப்பதுமில்லை; அந்தப் பொறுப்புணர்ச்சியும் பெரும்பாலானவர்களுக்கு இருப்பதில்லை.

ஓட்டு கேட்கவருகிறவரைத்திடலெனக் கேட்டுப் பாருங்கள், “ஐயா! ரோடுகளுக்கு எவ்வளவுபணம் செலவாகிறது? ஆரம்பக்கல்விக்கு எவ்வளவு செலவிடப்படுகிறது?” என்று. பதில் கிடைக்காது. அதற்கு ஈடாக ஒரு இலேசான புன்சிரிப்பு தவழும் அபேட்சகர் முகத்தில்; “என்ன நாயுடு! இதென்ன புதிசா இருக்கே உன்போக்கு. கேள்விகளெல்லாம்பலமாக இருக்கு. என்ன கோபம்?” என்று தான் கேட்பார். ஓட்டர், கேள்விகேட்பதே கோபத்தின் அறிகுறி என்று அபேட்சகர் கருதுவார்.

அபேட்சகரை மட்டுமா குற்றங்கூறுவதற்கு இருக்கிறது, ஓட்டளிக்கும் அன்பருடைய போக்கிலே குறை ஏராளம்!

அவரும் இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கமாட்டார். தோட்டக்குத்தகைத்தகராறு— தொழுவத்திலே உள்ள மாட்டுத் தகராறு—சம்பந்திச் சண்டை — சப்இன்ஸ்பெக்டருக்குச் சிபாரிசு—சம்பா அரிசி கேட்டுத்தர முடியாது என்ற கதை—இவ்வளவும் நடக்கும், ஒவ்வொரு வீட்டுத்தாழ்வாரத்திலும்—அபேட்சகர் ஒருபுறம் சிறுபடையுடன், ஓட்டர் எதிர்ப்புறம் குழந்தைகுட்டிசகிதம்.

பேசிமுடிந்தபிறகு, “கடவுளுக்குப் பொதுவாகநான் உன்னைத்தான்நம்பியிருக்கிறேன்” என்று அபேட்சகர் முடிப்பார்; “எதற்கும் எங்க அண்ணாரை ஒருவார்த்தை கேட்டுக்கொண்டு சொல்லி விடுகிறேன்” என்று ஓட்டர் முடிப்பார்.

பல ஆயிரம் ரூபாய்களைக்கொண்டு பல ஆயிரம் மக்களின் நகரவாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக ஏற்பட்ட காரியம், இப்படி, இடந்தேடிகளிடம் தரப்படுகிறது. முறையல்ல என்கிறோம்.

குறிப்பிட்டசில கொள்கைகள் நிர்வாக சம்பந்தமாக இன்னின்னவேலைகள், செய்கிறோம், என்று கூறும் அபேட்சகரும், நிற்பவர்யார், அவர் கட்சி எது என்பதை மறந்து, அவர் காட்டும்திட்டம்எப்படிப்பட்டது என்பதைக் கூர்ந்து கவனித்து, சரியா, இல்லையா, என்று ஆராய்ந்துபார்த்து அதன்படி, யாருக்கு ஓட்டளிப்பது என்று தீர்ப்பு செய்யும் ஓட்டரும், ஏற்படவேண்டும். ஏற்படுவாரா! நிச்சயமாக ஏற்படுவர். எப்போது? எவ்வகையில்? பொதுவாழ்வு தூய்மையாக்கப் பட்டால். உண்மைப்பொதுப் பணியாளர்கள், தங்கள் உணர்ச்சியும் உழைப்பும், கட்சிகளின் பெயர்கூறிக் கொண்டு இடந்தேடும் இயல்பினரால் சூறையாடப்படாமல் பாதுகாத்துக்கொண்டால்.

எனவேதான் நாம், கட்சிநோக்குடன் அல்ல, நகரநிர்வாகம் சரியான முறையில் இருக்கவேண்டும் என்ற நோக்குடன் கூறுகிறோம், இடந்தேடிகளை ஆதரிக்காதீர்கள்—அவர்களுக்காகக் கட்சிகளை—கொள்கைகளை பலியிடாதீர்கள்—பொதுவாழ்வை, புதியதோர் சுறண்டல்ஸ்தாபனமாக்காதீர்கள் என்று கூறுகிறோம்.

### பெரியார் கண்டனம்

“சர்க்காரின் மில் ஒழிப்புக் கொள்கை, மிக பிற்போக்கானது, நாட்டை பின்னுக்கு இழுப்பது; வடநாட்டு முதலாளிகளுக்குத் திராவிட நாட்டை மார்க்கட்டாக்குவது”

பெரியார்,

[சிதம்பரம் சொற்பொழிவு.]

## பொடிப்பயல்

இலட்சாதிகாரியைக் கோடீஸ்வரனாக்குவது—ஏழையைப் பாரியாக்குவது என்ற முறையில்இராது எமது கொட்பாடும் வேலைமுறையும்; ஏழையின் நிலையை உயர்த்துவதும், செல்வவானின் அந்தஸ்தைக்குறைத்து, இரு சாராரையும் ஒரு சமநிலை அடையச்செய்வதுமே எமது நோக்கமாகவும் வேலைத் திட்டமாகவும் இருக்கும்,

*யார்கூறினது இந்த உன்னதமான நோக்கத்தை? கேட்பதற்கே உற்சாக மூட்டுகிறதே! இப்படிப்பட்ட திட்டம் வந்தால் தானே நாடு முன்னேறும்; அவ்விதமான முற்போக்கான திட்டத்தைக் கொண்டவர்யார்? பத்திரிகைகளிலே இந்தத் திட்டத்தைப் பற்றிப் பாராட்டியும், இதைக்கூறினவர்யார், என்பது பற்றி விளக்கி வாழ்த்தியும் இதுவரை ஒன்றும் காணோமே என்று கேட்கிறான் நமது ஆபீஸ்பையன். பயல், விஷயம் தெரியாதுகேட்கிறான்!*

*திட்டம் மிகநல்லதுதான்—நமது பத்திரிகைக்காரர்களுக்கு ரொம்ப இஷ்டமான திட்டந்தான் அது. ஆனால், இதனை, யாராவது ஒருகாங்கிரசார் கூறி இருக்கக் கூடாதா—பேனாமளமளவென்று வேலைசெய்ய ஆரம்பித்திருக்குமே. ஓவியம் வந்திருக்கும்—மாளிகை மூன்றுமடுக்கிலிருந்து, செல்வவானை ஒருகரம் கீழே இரண்டாம் மாடிக்கு இறக்குவது போலவும், தரையில் இருக்கும் தரித்திரவானை இன்னொரு கரம், தூக்கி, இரண்டாம் மாடிக்குக் கொண்டு போவது போலவும், இருவரும் இரண்டாம் மாடியில் இன்பமாக இருப்பது போலவும்படம் வந்திருக்கும்.*

—மேலிருந்து கீழ்இறங்கிவந்த
செல்வன் கண்டனன்
தாழ்வகன்று தரித்திரனும்தகுதி
நிலை அடைந்ததை.

*என்று பாட்டு வந்திருக்கும். ஆமாம்! நமது பத்திரிகைக்காரர்களுக்கு, வார்த்தைக்கா பஞ்சம்—கொட்டி இருப்பார்கள். ஆனால் என்ன செய்வது? அந்தஉன்னதமான கொள்கையை, இந்த லியாகத் அலிகான் அல்லவா சொன்னார்? எப்படிப்பாராட்ட முடியும்? எப்படிப்புகழ்வது? போகிறது, சர். மிர்சா இஸ்மாயில் சொல்லி இருந்தால்கூடப் பரவாயில்லை, முஸ்லீமாக இருந்தாலும் லீகரல்ல, பாராட்டிவிடலாம் ஆனால் லியாகத் அலிகான் அல்லவா பேசினார் இதுபோல. என்ன செய்வது? ஆபீஸ்பையன், கண்டானா இந்தசூட்சமத்தை—எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்மெய்ப் பொருள் காண்பதறிவு—என்கிறான்—முட்டாள்! அவனுக்குக் குறள்தான் தெரியும், கௌடல்யர், சுக்கிரர், மனு, முதலியவர்கள் தெரியாது.*

●

*யாரது ஆரியருக்குப் போர்த் தொழில் தெரியாது என்று சொன்னவர்கள்? கபர்தார்! இனி அப்படிஎல்லாம் பேசக் கூடாது. ஆமாம், அதோபாருங்கள் திருவாங்கூர் பக்கம்— சர். சி. பி. இராமசாமிஐயர், திவான் ஜீமட்டுமல்ல இப்போது, லெப்டினன்டுஜெனரல்! இராணுவத்துக்கும் தலைவர்! சும்மாவா!! இரண்டு தாலுக்காவிலே இராணுவஆட்சி. அத்தோடு முடிகிறதா? சர்க்கார் தமது முழுசக்தியையும் கொண்டு, கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவர்—என்று சவாலும் விட்டிருக்கிறார். இவ்வளவு போர்க்குணம் இருக்க, ஐயர்மார் சண்டைக்குத் தகுதியானவர்களல்ல என்று கூறுவதா? நியாயமல்ல சார், கொஞ்சம் கூடநியாயமல்ல! வேண்டுமானால் ஒருபடையைக்கொடுத்துப்பாருங்கள் அவர்களிடம், படை அமைப்பு முறைமட்டும், அந்தப்பழயமுறைப்படி 'பிரம்ம குலம்' இல்லாதபடித்தான் இருக்கவேண்டும். வேறே எதற்கும் அல்ல, யுத்தசமயத்திலே ஜெயத்துக்காக ஜபம் செய்யவேண்டுமா, இறந்தவர்களுக்கு, மோட்சசாதனார்த்தம் செய்ய வேண்டிய காரியங்களைக் கவனிக்கவேண்டுமா, இத்யாதிகாரியங்களுக்காக, பிரம்ம குலத்தைப்படையிலே சேர்க்கவேண்டாம், இதரானைச்சேர்த்து, ஐயர் ஒருவரை லெப்டினன்டுஜெனரல் ஆக்குங்கள், பிறகுபாருங்களேன், நினைத்தமாத்திரத்திலே இராணுவ ஆட்சிதான், வீரதீரச் செயல், காரசாரமான அறிக்கை அவைகளுக்குக்குறைவே இராது. இராணுவ ஆட்சி ஏற்பட்டால் கண்டிப்பார்களேசார், காஷ்மீர் சம்பவத்தின்போது ஜவாஹர் கண்டித்தாரே, என்பீர்கள். ஆமாம், கண்டிக்கத்தான்வேண்டும். இராணுவ ஆட்சி கூடாதுதான், ஆனால் நம்மசி. பி. அதைச் செய்யும்போது, என்ன இருந்தாலும், எப்படி, மனம்வந்து, கண்டிப்பது, என்று மனம் ஒருமாதிரியாக இருக்கு. என்ன மோசார், அவர் அப்படிச் செய்து விட்டார்—இருந்தாலும் நம்மவரை நாமே கண்டிக்கிறதுன்னா அவ்வளவா நன்னாஇல்லே பாருங்கோ—என்று பத்திரிகை ஆபீஸ்களிலே பேச்சு நடக்கிறதாம். நம்ம ஆபீஸ் பையன் சொல்கிறான்—பயல் இந்தத்தகவலை எல்லாம் எப்படியோ கொண்டுவந்து சேர்த்துவிடுகிறான் இங்கே.*

●

## பிறப்பு

காஞ்சிபுரத்தில் 7—6—43ல் கரூர் ஜவ்ளி M. V. M. பச்சையப்பமுதலியார் குமாரன் தாண்டவமூர்த்தி—வடிவாம்பாள், ஈ. வெ. ரா. பெரியார் தலைமையில்திருமணம்செய்த, தம்பதிகளுக்கு, 31—10—46ல் பெண் குழந்தை பிறந்து தாயும் சேயும் சுகம்.

## மதத்துரோகிகள்!

*கிரேக்கநாட்டுக் கவிஞர்களில்முன்னணிவரிசையில் இருந்தவரும் நாடக நூலாசிரியருமான இஸ்க்கிலீஸ் என்பவரை, மதவிரோதி என்று மக்கள் தூற்றினர். அவர்மீது பழிசுமத்தியவர்கள், மக்களிடம் தப்புப்பிரசாம் செய்ததோடு திருப்தி அடையவில்லை; சர்க்காரையும் தூண்டிவிட்டு அவர்மீது வழக்குத் தொடுத்தனர்!*

*இஸ்க்கிலீஸ் செய்த குற்றம் என்ன? எதற்காக அவர்மதத்துரோகி என்று கண்டிக்கப்பட்டார்? அது தான், வேடிக்கை.*

*அவர்தான் முதன் முதலாகநாடக மேடையில் நடிகர்களுக்குக் கதையில் வரும் பாத்திரங்களுக்கேற்ற உடை, வேஷம், அணிவித்தவர். தத்ரூபமான காட்சிகளை நாடகமேடையில்அமைத்துக்காட்டினார். இது மதத்துக்கு விரோதம் என்று அக்காலக்கிரேக்கப் பூஜாரிக்கூட்டம் கருதி, அவர்மீது வழக்கு தொடுத்தது.*

*வழக்கு தள்ளப்பட்டது! நீதி மன்றத்தினர், அவர் மதவிரோதி அல்ல, நாடகமேடையிலே அவர் செய்த சீர்திருத்தம், எந்த வகையிலும் மதத்தைக்கெடுத்த தகாது, என்று தீர்ப்பளித்தனரா? இல்லை! இல்லை!*

*இஸ்க்கிலீஸ், பேனாவீரர்மட்டுமல்ல, வாளேந்திடுபவர். சாலமீஸ், மாரத்தன், எனும் சரிதப்புகழ் பெற்ற சமர்களில் அவர் போர்வீரராய்க் கலந்துகொண்டு, உடலில்வடுகொண்டவர். எனவே வீரத்தொண்டு ஆற்றியவராயிற்றே என்பதற்காகத்தான், அவர்மீது மதவாதிகள்கொண்டுவந்த வழக்கைச் சர்க்கார் தள்ளிவிட்டது!!*

*சோகரசம் ததும்பும் உயர்தரமான நாடகங்கள் தீட்டுவதில் அவருக்கு இணையாரும் இல்லை. 90 நாடகங்கள் இயற்றினார்; ஒருசிலவே உள்ளன. மற்றவை மறைக்கப்பட்டுப்போயின.*

*கீர்த்திவாய்ந்த அக்கவிஞர் 69 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் வாழ்நாளிலே வம்பு செய்ததோடு விடவில்லை,வைதீகக்கும்பல். அவர் இறந்த பிறகுகூட, அவரைப்பற்றிக் கேலியான கதைகளைக்கட்டிவிட்டனர்.*

*அவருடைய வழுக்கைத்தலையை ஒருவெண்கற்பாறை என்றுஎண்ணிக் கொண்டதாம் ஒரு கழுகு. அதனால் மண்டைமீது ஒரு ஆமையைப் போட்டதாம். அதனாலேயே அவர் இறந்து விட்டாராம்! இப்படி ஒரு "கிண்டல்" கதையைக் கட்டிவிட்டனர்.*

*நாடகத்தில் உடை, கதாபாத்திரத்துக்கேற்றவிதமாகப் போட்டுக்கொள்ளச்சொன்னது, மதத்துரோகமாகக் கருதப்பட்டகாலம் இருந்தது.*

*மதவாதிகள் மனப்போக்கு, எந்த அளவுக்குச்செல்லும் என்பதற்குஇது ஓர் எடுத்துக்காட்டு. பகுத்தறிவுக்காக வாதாடுபவர்களின் பாதை எவ்வளவு ஆபத்தானது என்பதையும் இது விளக்கும் சம்பவமாகும்.*

*எந்த நாட்டிலே, யார் எத்தகைய நோக்கத்துடன், எந்தவிதமான திருத்தம், புதுமை, புகுத்தினாலும்சரி, மதவாதிகள் உடனே, 'ஐயோ! மதம் கெட்டுப்போச்சு! மதத்துரோகியைக் கண்டிக்கவாரீர்" என்ற கூச்சலைக் கிளப்புவர். மற்றநாடுகளிலே, மதிவாணர்கள் கிளம்பி இந்தக்கூச்சலை அடக்கிவிட்டனர். இங்கோ இன்றும் அந்தக் கூச்சலுக்குத்தான்விசேஷமதிப்பு, செல்வாக்கு,ஆதரவு!*

*அறிவுபரவிய இந்நாளிலே,யாரும் இஸ்க்கிலீஸ் செய்த காரியத்தைமதத்துக்குக்கேடுபயப்பது என்றுகூறமாட்டார்கள். ஆனால் அவர் அந்நாளில், மதத்துரோகியாகவேகருதப்பட்டார்,* ***கண்டிக்கப்பட்டார்.***

## (ஆ) பத்து,கோடி!

**நேஷனல் ரேயான் (இமிடேஷன்சில்க்) கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயருடன், பம்பாயில் புதியதோர் கம்பெனி ஆரம்பமாகிறது.**

**பலவகையான ஆடைகளைத் தயாரிக்கும் பெரிய ஆலைத் தொழில் இது, வீட்டுக்கொரு ராட்டைத்திட்டமல்ல. செயற்கைப்பட்டு நூல் தயாரித்து அதைக்கொண்டு ஆடைகள்தயாரிக்கும் முறை.**

**இந்தக்கம்பெனிக்குமூலதனம் எவ்வளவு? பத்துகோடி ரூபாய்! ரேயான் தயாரிப்புக்காகத் தேவைப்படும் சகல பொருள்களும் இந்தியாவிலேயே கிடைக்கின்றன. ஆகையால் மூலப்பொருளுக்காக வெளிநாட்டுத் தயவு தேவையில்லை.**

*யந்திரசாதன யோசனைகள், கட்டட சம்பந்தமான யோசனைகள், கூறுவதற்கு, இரண்டு அமெரிக்கக் கம்பெனிகளின் உதவியைப்பெற ஏற்பாடாகி இருக்கிறது. பத்துவருஷ காலத்துக்கு அந்தக்கம்பெனிகளின், நிபுணர்கள், இந்தக்கம்பெனிக்கு யோசனைகள் கூறுவர். அதற்காக அந்த அமெரிக்கக்கம்பெனிக்குப் பணம் தரப்படும். அதாவது, நாம் ஏற்கனவே கூறியபடி அமெரிக்க, வடநாட்டு முதலாளிகளின் கூட்டு ஆதிக்கம்!*

*இந்தப்புதிய பம்பாய் கம்பெனிக்கு, யாரார் டைரக்டர்கள்?*

1. சர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ்
2. சர். ஆர்தீசர்தலால்
3. வால்சந்த் ஹீராசந்த்
4. சர். மணிலால் நாணுவதி
5. நவீன் சந்திர மாமத்லால்
6. கஸ்தூரிபாய் லால்பாய்
7. ஏ. டி. ஷ்ராப்
8. ஜீவன்லால் சுனிலால் சினாய்
9. ரசிக்லால் ஜீவன்லால் சினாய்

*ஒன்பது டைரக்டர்களில் ஒருவர் நீங்கலாக மற்றவரனைவரும், பம்பாய் முதலாளிகள். கஸ்தூரிபாய் லால்பாய் மட்டும், ஆமதாபாத். சகலரும் வடநாடு.*

*கம்பெனிக்குத் தலைமைக்காரியாலயம் பம்பாய்.*

*ஆலை துவக்கப்படும் இடம் பம்பாய்க்கு அடுத்துள்ள கல்யாண். இந்தியாவில் எங்கும், இவர்கள் தொழில் நடத்தலாம்—சட்டப்படி அந்த உரிமை இருக்கிறது.*

*மானேஜிங்ஏஜண்டுகள், சினாய் கம்பெனியார், பம்பாய்.*

*பாங்கர்கள், சென்ட்ரல்பாங் ஆப் இந்தியா, பாங்க் ஆப் பரோடா, யுனைடெட்கமர்ஷியல் பாங்க், நேஷனல்சிடி பாங்க்ஆப் நியூயார்க்—சகலமும் பம்பாய்தான்!*

(6-ம் பக்கம் பார்க்க)

## பத்து,கோடி,

*5-ம் பக்கத் தொடர்ச்சி*

சட்டசம்பந்தமான யோசனை கூற, பாயன் கம்பெனி, லாக்கியர் கம்பெனி; இரண்டும் பம்பாய்தான்!

ஆடிட்டர்கள்,தலால் அண்ஷா கம்பெனி—பம்பாய் க்ஷேத்திரந்தான்.

பத்துகோடி! பட்டுக்குக்கூட அல்ல, செயற்கைப்பட்டுக்கு.

ஆரம்பத்திலேயே, நாளொன்றுக்கு, பத்து,டன் செயற்கைப் பட்டுநூல் தயாரிக்கப்படுமாம்.

அங்கே அப்படி, இங்கே என்ன காண்கிறோம்? ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே!,

இப்படி அங்கு கோடிகோடியாகப்பணம்போட்டு ஆலைகள் அமைக்கிறார்கள்—இந்த ஆலைகள் வளர வளர, அங்கு கதர்த் திட்டம் இருக்கமுடியாது என்பது வெளிப்படை. ஆனால் அங்குள்ள காங்கிரஸ் மந்திரிமார்கள், புதிய ஆலை கூடாது என்றுகூறவில்லை.

இப்படிக்கோடி கோடியாக மூலதனம் வைத்துத் தொழில் வளத்தைப் பெருக்கிக்கொண்டு பம்பாய், வளர வளர, அதே போது சென்னை, குடிசைத் தொழில், ராட்டைத் திட்டம், வெல்லப்பாகுகாய்ச்சும்வித்தை, என்பனபோன்ற முறையிலே கிராமீயக்கோலம் கொள்கிறது. பம்பாயும் சென்னையும் சேர்ந்து ஒருதொகுதியாக இருக்கவேண்டும என்று அரசியல் நிர்ணய சபைதிட்டமிடப்பட்டும்வருகிற போக்கைக்கவனித்துப் பாருங்கள்—பம்பாய்க்கு சென்னை மார்க்கெட்டாவதன்றிவேறென்ன வழி ஏற்படமுடியும்!

●

## மந்திரிகளும் மில்லும்

'சர்க்காரின்மில்ஒழிப்புக்கொள்கை, பருத்தி பயிரிடும் விவசாயிகளுக்குப் பெரும்நஷ்டத்தைஏற்படுத்துமென்று இம்மாநாடு கருதுகிறது. கதர் அபிவிருத்திக்காகச் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கையைப் பாராட்டியபோதிலும், அது, துணி தேவையைச் சமாளிக்கமுடியாதாகையால் அதிகமான பஞ்சாலைகளை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது''

என்ற தீர்மானம், அக்டோபர் 27ந்தேதி சென்னை. மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற மாகாண விவசாயிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டை மந்திரி தோழர் குமாரசாமிராஜா துவக்கி வைத்தார்—சட்டமந்திரி தோழர் பாஷ்யம் சொற்பொழிவாற்றினர்.

இப்படி இரண்டு மந்திரிகள்நேரடியாகக்கலந்து கொண்ட மாநாட்டிலே, மந்திரிசபையின் திட்டமான மில் ஒழிப்புக்கண்டிக்கப்பட்டது.

## நன்றி கூறல்

எனது சகோதரன் N. அர்ச்சுனன், 12—10—46-ம்தேதி இறந்தது குறித்து, சென்னை, காஞ்சிபுரம், சண்முகபுரம், திருவத்திபுரம், புவனகிரி, தூத்துக்குடி, பறங்கிமலை, நாகை, விருதுநகர், தென்மதுரை, மதுரை, அழகாடி, தஞ்சை, கும்பகோணம், பேராவூரணி, திருச்சி, திண்டுக்கல். பட்டுக்கோட்டை, நாகர்கோவில், தேவபாண்டலம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, ஆனைமலை, ராசிபுரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம், அம்மாப்பேட்டை, தர்மபுரி, கோயமுத்தூர் சூலூர், மணச்சநல்லூர், முதலிய ஊர்களிலும், மற்றும்பல இடங்களிலும் அனுதாபக்கூட்டங்கள் கூட்டியும், இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியும், எங்கள் குடும்பத்தார்க்கு அனுப்பிவைத்த அனுதாபச் செய்திகளுக்கும் சுயமரியாதைசங்கங்களுக்கும், வாசகசாலைகளுக்கும், திராவிடவாலிப மாணவ கழகங்களுக்கும், மற்றுமுள்ள திராவிட இயக்க அன்பர்களுக்கும், பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை இப்பத்திரிக்கையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் நன்றிகூற முடியாமைக்கு வருந்துகிறோம்,

**என். நல்லசேனுபதிசர்க்கரைமன்றாடியார்**

பழயகோட்டை பட்டக்காரர்.

---

மதிப்புரை

## "மறுமலர்ச்சி"

புதுவைத்தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய "மறுமலர்ச்சி" என்ற கவிதை நூல் ஒன்று எமது பார்வையைக் கவர்ந்தது. தோழர் புதுவைச்சிவம் தமிழ்மக்கட்குப் புதியவரல்ல. இதற்கு முன்னர் பல நூல்களைக் கவிதை வடிவில் எழுதிவெளியிட்டுத் தமிழ்மக்களின் மதிப்பைப் பெற்றுள்ளவர். இவருடைய பாடல்கள் எப்பொழுதுமே சீர்திருத்தக் கருத்துகளோடு கூடியவையென்றாலும், 'மறுமலர்ச்சி'என்னும் இந்நூல் சீர்திருத்தத்துறையில் ஒரு தனிமதிப்பைப்பெறக்கூடிய முறையில் அமைந்துள்ளது என்று கூறின், அது மிகையன்று.

மக்களின் அறிவுக்குஇட்டவேலியை வெட்டி வீழ்த்தினாலன்றி, எந்த அரசியல் விடுதலையாலும் பயன்பெறமுடியாதென்ற உண்மையினைக் கவி, மிகவும் அழகாக—ஆணித்திறமாக எடுத்து விளக்கியிருக்கிறார். மற்றும், காதல், கற்பு, அன்பு, அறிவு,வறுமை,உரிமை இனம், மொழி முதலிய துறைகள் ஒவ்வொன்றும், இந்நூலாசிரியரின் அறிவுத்திறனுக்கு அரண் செய்வது போல, பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன, படிப்பவர் மனதைப் பக்குவப்படுத்தும் முறையில்அமைந்துள்ள இந்நூல் ஒவ்வொரு தமிழ்மக்கள் கையிலும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

**இதன் விலை 0—13—0**

**கிடைக்கும் இடம்:—**

**ஞாயிறு நூற்பதிப்பகம்,**
28, அம்பலத்தாடுஜயர்
மடத்துத்தெரு, பாண்டிச்சேரி.

## காஞ்சி நாயனு இசைக்கழகம்

சின்னக் காஞ்சிபுரத்தில், காலஞ்சென்ற பிரபல சங்கீத வித்வான் நாயனாப்பிள்ளை அவர்களின் நினைவாக மேற்படி இசைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா 13—10—46ல்புரட்சிக்கவிஞர்பாரதிதாசன் அவர்களால் ஆரம்பிததுவைக்கப்பட்டது. நாயனாப்பிள்ளை அவர்களின் சங்கீதத்திறமையைப பற்றியும், அவரது இசைத்தொண்டு தமிழ் மக்களால் மறக்காமல் இருக்கும் முறையில் மேற்படி கழகம் அமைத்ததைப் பாராட்டியும் காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவர் கதிர்வேலர் அவர்களும், முறைமன்றத்தலைவர் சுந்தரம் அவர்களும் பாராட்டுரை வழங்கினர். தோழர் T. P. S. பொன்னப்பா அவர்கள் அனைவரையும் வரவேற்று உபசரித்தார். இசைமன்னர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் இனிய இசைவிருந்துடன் கழகத் தொடக்க விழா இனிது நடைபெற்றது.


**விரைவில் மலர்கிறது!**
மகத்தான அமைப்புள்ள
**காலண்டர்கள்.**
கலங்கா நெஞ்சமும், இளகிய உள்ளமும் படைத்த நமது ஒப்பற்ற திராவிடத் தலைவர்பெரியார்
**ஈ. வெ. ரா.**
அவர்களின் அழகிய உருவம் அமைந்து. இதுவரை வெளிவராத முறையில் அமைக்கப்பட்டுள்ள காலண்டர் ஒன்றின்
**விலை 0—8—0**
வியாபாரிகட்குத் தக்க லாபம் தரப்படும்.
விபரங்கட்கு:—
**திராவிடன் பதிப்பகம்**
P. B. 18, வேலூர், N. A.


## அவர் போகும்இடம்,

ஆமதாபாத் மில்காரர் சங்கத் தலைவர் சேட் சாந்திலால் மஙல் தாஸ், அகில இந்திய ஆலைத் தொழில் முதலாளிகளின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சர்வ தேச நெசவாலைத்தொழில் மாநாடு ஐரோப்பாவில் பிரசல்ஸ் நகரில் நவம்பர் 14-லிருந்து 21 வரை நடைபெறுவதில் கலந்து கொள்ளச் செல்கிறார்.

## அங்கெல்லாம்

ஆலைத் தொழில்வளர்ந்துள்ள வடநாட்டுக்கும், சுதேசசமஸ்தானங்களுக்கும் ஏற்கனவே ஏற்பாடாகி இருந்தபடி, புதிதாகக் கதிர்கள் தரப்படுகின்றன. அந்த விவரம் கீழேதரப்பட்டிருக்கிறது:- மெல்லியரகத்துக்கு ஏற்றவிதமான கதிர்களின் எண்ணிக்கையை மட்டுமே தந்திருக்கிறோம்.

| | கதிர்கள் |
|---|---|
| பம்பாய் | 114000 |
| பரோடா | 38000 |
| பஞ்சாப் | 114000 |
| ஐக்யமாகாணம் | 114000 |
| பீகார் | 38000 |
| வங்காளம் | 125000 |
| அசாம் | 100,000 |
| ஒரிசா | 19000 |
| மத்யமாகாணம் | 76000 |
| எல்லை | 114000 |
| சிந்து | 19000 |
| டில்லி | 114000 |
| நாபாசமஸ்தானம் | 1 ,, |
| கபூர்தலா | ,, |
| பவால்பூர் | ,, |
| நவநகர் | 38000 |
| பவநகர் | ,, |
| காம்பே | 19000 |
| குவாலியர் | ,, |
| பிகானீர் | ,, |
| தோல்பூர் | ,, |
| ஆள்வார் | ,, |
| பாலன்பூர் | ,, |

இப்படி இன்னும்பல இடங்கட்குக் கதிர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அங்கெல்லாம், கதிர்களைப் பெற்றுக்கொண்டு, ஆலை உற்பத்தியை அதிகப்படுத்தும் ஏற்பாடு நடந்துவருகிறது.

சென்னை மட்டுந்தான், அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள புதியகதிர்களைப் பெறுவதோ புதிய ஆலைகளை அமைப்பதோ கூடாது என்று தடுக்கப்படுகிறது ஆளவந்தவர்களால். ஏன்? அங்கெல்லாம் ஆலை வளரும் போது இங்கு, அந்தத்தொழிலை நசுக்க முயல்வானேன்?

●


புதிய வெளியீடு

**1. மறுமலர்ச்சிக் கவிதைகள்**
(புரட்சிக் கவிஞரின் மாணவர் எழுதியது)
இதன்கண் தமிழகநிலை, தமிழர்நிலை, மொழிநிலை, பெண்ணுலகு, தொழிலுலகம், சீர்திருத்தம் ஆகிய பகுதிகளில்,தமிழர் சமுதாயத்தைத் தட்டியெழுப்பும் கவிதைகள் பலகொண்ட அழகிய பதிப்பு. விலை அணா 13

**2. திராவிடப்பண்**
(மெட்டுப் பாடல்கள்) விலை அணா 3

**3. காதலும் கற்பும்**
(கவிதை) விலை அணா 3
தபால் செலவு வேறு.

விற்பனையாளருக்கு 20% கழிவு தரப்படும். அனுப்பும் செலவு வேறு.

இடைக்குமிடம்:—
**"ஞாயிறு நூற்பதிப்பகம்"**
28, அம்பலத்தாடுஜயர் மடத்துவீதி, பாண்டிச்சேரி,

# ஏமாற்ற வேண்டாம்!

——(o)——

"முன்பு, கையினால் நூற்றநூலை உபயோகித்துவந்த நெசவாளர்கள் கூட, மில்லில் தயாராகும் நூலை உபயோகிக்கத் தொடங்கினர்—இதன் விளைவுஎன்ன ஆயிற்று? அகிலபாரத சர்க்காசங்கத்தின் கிளைகளில் நூல் தேங்கிக்கிடந்தது, நெசவு செய்ய ஆட்கள் முன்வாராததால்"

என்று, கொஞ்சக் காலத்துக்கு முன்பு, சென்னைமாகாண நெசவுக கமிஷனர் ஒரு அறிக்கை வெளியிட்டார். சர்க்காசங்கத்தின் சங்கடத்தை அவர் கண்டறிந்து கூறினார், இப்போது அதனைப் போக்க, சர்க்கார் வேலைத்திட்டம் தயாரித்திருக்கிறது—மில்லிலே நூற்ற நூல்இருந்தால் தானே, நெசவுக்கு அதனை உபயோகித்துக்கொண்டு, கதர் நூலைப்பெற மறுக்கிறார்கள்—சரி மில்களை ஒழித்துவிட்டால், வேறுவழி இல்லாமல் கதர் நூலைத் தானே உபயோகிக்க வேண்டும்—அந்தமுறையே சரியானது என்று தீர்மானித்தனர். அதாவது அவர்களின் நோக்கம், தேவைப்படாத, விரும்பப்படாத, பயன்படாத, கதர்நூலை எப்படியாவது நெசவாளர்தலையிலே ஏற்றவேண்டும் என்பதுதானேயொழிய, நெசவுத்தொழிலின் அளவும் தரமும் வளர வேண்டும், அதன் மூலம்வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்என்பதல்ல. அகல் விளக்கின்பிரகாசம் தெரிவதற்காக, மின்சார விளக்கை அணைத்துவிடுவதுபோன்ற செயல் இது!

எதற்காகவோ கதர் இயக்கத்தை ஆரம்பித்து[illegible]விட்டது—அதனை ஒருமகா[illegible]வின் பெயருடன் இணைத்தாகி விட்டது, ஆனால் எதிர்த்திட்டமோ, வளரக் கூடியதாகவோ, போட்டியைச் சமாளிக்கக் கூடியதாகவோ, பொதுமக்களிடையே தானாகச் செல்வாக்குப் பெறக்கூடியதாகவோ இல்லை. செல்லப்பிள்ளையாக வளர்ந்து வருகிறது, காந்தியாரின் பராமரிப்பாலும், அவருடைய சீடர்கள் ஆட்சி செய்யும் இடங்களிலே, 'மான்யம்' பெற்றுக்கொண்டும். இந்தச் செல்லப்பிள்ளை, "பெரியஇடத்தில்" இருந்து வருவதால், பலரும் புன்சிரிப்புடன் அதனை உபசரித்தனர். உபசரிப்பு, கதருக்கு அல்ல, அதனை வளர்க்கும் காந்தியாருக்காக. எனவே, ஊட்டி வளர்த்தும்செல்லப்பிள்ளைஉருப்பட வில்லை, அதேபோது, விளையாடிகொண்டுகிடந்த வேறு பிள்ளை—மில்—ஓங்கிவளருகிறது. இதைக் காணும்போது, செல்லப்பிள்ளையைக் காப்பாற்றியாக வேண்டும், அதற்காக ஓங்கிவளரும் பிள்ளையை விரட்டிவிட வேண்டும் என்று காந்தியார் கருதுகிறார்.

பிரதாபமுதலியார் கதை போன்ற சம்பவம். பிரதாபமுதலியார் சிறுபிராயத்திலே, வாத்தியாரிடம் படிப்பாராம்—படிப்பார் என்பது கூடப் பொருத்தமில்லை, வாத்தியார் படிப்புச் சொல்லித் தருவார்—பிரதாபன் சரியாகப் படிக்கமாட்டான்—வாத்தியாருக்குக் கோபம் வரத்தானே செய்யும்—அடிக்கத் தோன்றுமல்லவா! ஆனால் பிரதாபன், பெரிய இடம், செல்லப்பிள்ளை. எனவே, பையன் தவறு செய்தால்கூட அடிக்கக் கூடாது, என்று வீட்டார் உத்தரவிட்டனர். "அடியாதபிள்ளை படியாதே" என்பது தெரியும் ஆசிரியருக்கு. தெரிந்து!"பையனை மிரட்டினாலே போதும், அவன் ஏதாவது தவறு செய்யும்போது, உங்கள் மகனை அடியுங்கள், அதைக்கண்டே நமதுபையன் மிரண்டுவிடுவான்; அது போதும்" என்று யோசனை சொன்னார்களாம்பிரதாபன்வீட்டிலே.

பிரதாபன் தவறு செய்வது; அந்தத்தவறுக்காக வாத்தியாரின்மகன் அடிபடுவது!

கதர், உருப்படமுடியாத காலத்திற்கு ஒவ்வாத திட்டமாக இருக்கிறது, அதற்காக, மில்துணியைத் தண்டிப்பது! செல்லப்பிள்ளையல்லவா!

கதர்பயன் இல்லை—அதைக் கைவிட்டுவிடத்தான் வேண்டும் என்று, எப்படிக் கூறுவது, அப்படிப்பட்ட மகாத்மாவே கதர் வேண்டுமென்கிறாரே, அவர் வார்த்தையை மீறலாமா என்ற சங்கடம் பலருக்கு இருக்கிறது. தாட்சணியம், பக்தி, பாசம், குறுக்கிட்டுக், குழப்பம் உண்டாக்குகிறது.

ஆனால் ஒன்று தெளிவு. இன்று தாட்சணியத்துக்காகக்கதரிடம் அக்கரை காட்டுபவர்கள் அவ்வளவு பேரும், கதர் நிலைத்திருக்கக்கூடியது தான் என்று துளியும் நம்புகிறவர்கள் அல்ல. அதனை நிலைத்திருக்கச் செய்ய முடியாது.

கதர் விஷயம், மட்டுமல்ல; காந்தியத் திட்டத்திலே பலவற்றையும் இன்று ஆதரிப்பவர்களும், பிரச்சாரம் செய்பவர்களும், உள்ளூர அறிவார்கள் அந்தத்திட்டம், நடைமுறைக்கு ஏற்றதல்ல என்பதை. என்றாலும் இன்று ஆதரிப்பதற்குக் காரணம் என்ன என்றால், அது இந்நாட்டுக்கே சொந்தமான ஒரு பழக்கம்— ஒருவரைமகான்என்றும், மகாத்மா என்றும் கருதிவிட்டால், அவர் கூறுவதை, நடைமுறைக்கு ஏற்றதா தேவையா, என்பதுபற்றிய ஆராய்ச்சியுமின்றி, அப்படியே ஏற்றுக்கொள்வதாகக் கூறுவது. —பாசாங்கு — நடிப்பு —காற்றோடு ஆடுதல்—என்று அதற்கு எந்தப் பெயரிட்டாலும்சரியே.

"ஆவுரித்துத்தின்று உழலும் புலையரேனும், ..........அவர்கண்டீர் நாம் வணங்கும் தெய்வமாமே!" என்று நாயன்மார் பாடியபோது, மறுத்தவர்கள் உண்டா; நடை முறைக்குஏற்றதல்ல என்று சொன்னவர்களுண்டா, அவர் கூறியபடி, செய்து காட்டியவர்களுண்டா! போற்றிப்புகழ்ந்தனர், ஆனால் ஆவுரித்துத்தின்பவனை அன்று போலவே இன்றும் தீண்டாதான் என்றுதான் கூறிவருகின்றனர்—திருப்பதிகம் பாடினரேயொழிய, பாடினவரைக் கொண்டாடினரே யொழிய, அதன்படி நடக்கவுமில்லை—நடக்க முடியாதே என்று கூறியதுமில்லை. இந்த உதட்டு உபசாரம், நம்நாட்டில் பரம்பரைப் பழக்கமாகி விட்டது. ஆகவே தான் காந்தியத்திட்டம், நடைமுறைக்கு ஒத்துவராது என்பது தெரிந்திருந்தும், அந்தத்திட்டத்துக்கு நேர்மாறாகவே நடந்து கொண்டு வருபவர்களுங்கூட, காந்தியத்திட்டத்தைப் பாராட்டி மட்டும் பேசுகின்றனர்.

இவ்வளவு வெளிப்படையாக—அச்சம் கூச்சமின்றி—குருவை ஏமாற்றும் சீடர்கள் இதுவரை இருந்ததில்லை என்னலாம்! குருபக்தியைக் காட்ட ஒட்டுக் காணிக்கை அளித்ததன்றி உபதேசத்தின் படி சீடர்கள்நடந்து கொண்டதில்லை – நடந்துகொள்ளாததுமட்டுமல்ல, நடைமுறைக்கு ஏற்றதான திட்டம் தருமாறு குருவைக்கேட்டதுமில்லை. மற்றவர்கள், திட்டம் நடைமுறைக்கு ஏற்றதல்லவே என்று எடுத்துக் கூறும்போதும், சும்மா இருந்ததில்லை—தமது குருபக்தியைக் காட்டிக்கொள்ள, குறை கூறினவர்மீது கோபிக்கத்தவறியதில்லை. இப்படி ஒருபவாகில்லை, இருக்கிறது இங்கு செடுகாட்களாக.

இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக இருபத்திஒருநாள் உபவாசம் இருந்த காந்தியாரின் சீடர்கள், உபதேசத்தின்படி நடந்து கொள்பவர்களாக இருப்பார்களானால், இன்னமும், வார்தாரயிலடியிலும், இந்து சாயா—(டீ) முஸ்லிம் சாயா, என்ற சத்தம் இருக்குமா! இடைக்கால சர்க்கார் ஏற்பட்டிருக்கும்இந்த நாளிலேயும் இந்தக்கூச்சல்இருப்பது அழகா என்றுகாந்தியாரே, சென்றவார அரிஜனில் மனம் நொந்து எழுதவேண்டி நேரிட்டிருக்குமா?

காந்தியத் திட்டத்தைப், பாராட்டுபவர்களில் பெரும்பாலானவர்கள், போலிக்குருபக்தியைக்கொண்டவர்கள்; எனவே தான் கைராட்டைக்கொடிபிடித்துக்கொண்டு, நூற்புப்போட்டி நடத்திக்கொண்டு, காந்தியாரின் திட்டத்தை நிறைவேற்றுவதாகப்பாசாங்கு செய்துகொண்டு, 417 மில்களை வளரவிட்டிருக்கிறார்கள்.

குருசீட சம்பந்தத்தை நாம் விளக்கினதற்குக் காரணம், குருவையோ, சீடர்களையோ குறை கூறிக்கண்டிக்க அல்ல. உபதேசம், நடைமுறைக்கு ஏற்றதல்ல, என்பதை எடுத்துக்காட்டுவதற்குத்தான். நடைமுறைக்கு ஏற்றதாக இருக்குமானால், குருவை ஏமாற்றவேண்டிய அவசியம் சீடர்களுக்கு ஏற்பட்டிராது. எனவேதான், உபதேசம்வேலைத் திட்டமாக அமையமுடியாது என்பதை வெளிப்படையாகக்

(8-ம் பக்கம் பார்க்க)


# நெசவுத் தொழில்

## பாதுகாப்பு

## மாநாடு

——:(o):——

**11—11—46-ல் சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில்**

தலைவர்:— திரு. எஸ். முத்தையப்ப முதலியார்

திறப்பாளர்:— ஜனாப் அப்துல்மஜீத், எம். எல். ஏ.,

வரவேற்பாளர்:— திரு. ஏ. கே. தங்கவேலர்.

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-ந. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.


## ஏமாற்றவேண்டாம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

கூறவேண்டியகாலம் இது, இன்னமும் "ஒளிவு மறைவு" வேண்டாம் என்று கூறுகிறோம்.

சம்சாரசாகரத்தில் வீழ்ந்தால் கடைத்தேறமுடியாதல்லவா! ஆகவே பிரமமச்சரியமே சிறந்தது—இது ஒரு சித்தாந்தம்.

சம்சாரச்சிக்கல் உள்ள இடந்தான்—அதனைப் பரஸ்பர உதவியினாலும், அமைப்பு முறையிலே அறிவு செலுத்துவதாலும், சுலபமாக்கிக்கொள்ளமுடியும் – இது ஒரு வேலைத்திட்டம்.

உலகிலே, சித்தாந்தத்தின்படி சம்சாரத்துக்குப்பயந்து சாதுக்கூட்டத்தில் சேர்ந்தவர்களின் தொகை குறைவு—குடும்பவாழ்க்கையிலே, எவ்வளவு குறைபாடுகள் இருப்பினும், அவற்றைக் களைந்துகொள்ளும் முயற்சியிலேயே காலமெல்லாம் ஈடுபடுவதானாலும் சரியென்று துணிந்து இல்லறத்தில் ஈடுபட்டவர்களே அதிகப்பேர்.

நடைமுறைக்கு ஏற்றது—இலட்சியவாடைமட்டும் வீசுவது என்ற இருவகைகள், எதிலும் உண்டு. அரசு விஷயமுதல் அடுப்பறைவரையிலே!

உலகமே ஒருமாயை— அதற்காகத் தற்கொலையைத் தத்துவமாகக்கொள்பவருண்டா!

குடும்பமே தொல்லை, அதற்காகக்காவிதேடுவதா!

ஆற்றிலே ஆபத்துண்டு அதற்காக, அதிலே கால்வைக்காமலேயே இருந்துவிடமுடியுமா?

நெருப்புச் சுடும், அதற்காக வீட்டிலிருந்தும் அதனை அடியோடு விரட்டிவிடுவதா! முடியுமா? செய்யலாமா?

தென்றல்– புயல் – இரண்டும் காற்றின்இருவகைச்சக்திகளே—ஒன்று களிப்பூட்டுவது, மற்றொன்று கலக்கமூட்டுவது.

ஊற்று—வெள்ளம்— இரண்டும் நீர்சம்பந்தப்பட்ட இருசக்திகள்-ஒன்றுதேவை, மற்றொன்றுமருட்டுவது, கட்டுப்படுத்த வேண்டியது.

இதுபோலவே, இயற்கை செயற்கைச் சக்திகளாகட்டும், குடும்ப, தேசஆட்சி அமைப்பு முறைகளாகட்டும், தொழில், வியாபார முறைகளாகட்டும், இவை அவ்வளவிலும், நன்மைக்கான இடமும் உண்டு, நாசமூட்டும் இடமும் உண்டு, ஆனால்நாசமூட்டுபவைகளை நினைத்துக் கொண்டு இவ்வளவு சிரமப்படுவானேன், அந்த முறையையே நீக்கிவிடுவோமே என்றுதோன்றுவதுண்டு. இதவே காந்தீயம்.

காந்தியார், கிராமவாழ்க்கையிலேதான், அமைதியும் ஆனந்தமும் பெறமுடியும் என்று நம்புகிருர்—கூறுகிருர்—நகரம்நாசரீகம் என்ற பெயரால் நாசவலைவீசும் இடம், என்று கூறுகிருர்—மெஷின்கள் மனிதனைமாய்க்கும் என்று பேசுகிருர் — எனவே அவர் ஆடைக்கு ராட்டையும், அரிசிக்கு உலக்கையும், எண்ணெய்க்குச் செக்கையும் இனிப்புக்கு வெல்லத்தையும், காட்டுகிருர—உலகம் — இதற்கு நேர்மாருகப் போவதைப்பற்றியோ, இந்த உரைகளைக் கேட்டுக் கொண்டுள்ள நாட்டினரேகூட, வேக வேகமாக, நவயுகத்தில் ஈடுபடுகிருர்கள் என்பதையோ, அவர் பொருட்படுத்த வில்லை. அது அவருக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையைக்காட்டுவதாக இருக்கலாம். அவர் உரையைக்கேட்டுக்கொண்டுள்ள நண்பர்களை, அந்த உபதேசத்தின்படி நடந்து கொள்ளமுடியாது என்பது தெளிவாகத்தெரிந்த பிறகும், ஏன், சீடர்களென வேடமிட வேண்டும், என்று கேட்கிரேம்.

நெருக்கடிகள் நேரிடும்போது தத்துவத்துக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் பொருத்தமற்ற நிலை பிறக்கும் — நெசவாலைத் தொழில் சப்பந்தமாக இன்று அத்தகைய நிலைபிறந்திருக்கிறது. கதர், ஒரு தத்துவம் — நடைமுறையிலே அது தததளிக்க வேண்டி இருக்கிறது — இதனை இனியும் மூனித்து வைக்கவேண்டாம்.

மில்களை ஒழித்தாலொழிய, ஒழிப்பதுடன், சர்க்கார் இதற்கு மானியம் ஏராளமாகத்தந்தபடி இருந்தாலொழிய, சாககார இது சமபந்தமாக நிர்பந்தப்படுத்தினுலொழிய, கதர், கால் ஊன்ற முடியாது என்பது தெரிந்துவிட்டது. எவ்வளவு வருஷகால உபதேசத்துக்குப் பிறகு, எவ்வளவு பலமான பிரசாரத்துக்குப்பிறகு ஏற்பட்டிருக்கிறது இந்நிலைமை! இதன்பொருள் என்ன? கதர், நடைமுறைத்திட்டமாகாது, எனவேதான், பொருள்நஷ்டம், நேரநஷ்டம், திறமை நஷ்டம் ஆகிய இவ்வளவும், விளைவுகளாககொள்ளவேண்டி நேரிடுகிறது, கதர்த்திட்டத்தை நிறைவேற்றிவைக்க. இந்தச் 'சுமை' ஏன்? எவ்வளவு நாட்களுக்குத் தாங்கமுடியும்? ஏன், தென்னுடுமட்டும் தாங்கவேண்டும்? என்ற கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடியுங்கள், தனியே இருந்து, ஆழ்ந்தசிந்தனைசெய்து.

●

## புதிய மந்திரி

2-பக்கத் தொடர்ச்சி

வில் சிதைந்த குழந்தையை ஒத்த யோசனைக்கு!

வேண்டுவது, கிராமச்சர்வகலாசாலையுமல்ல, அதற்குத் தபால் முறையுமல்ல.

ஜெர்மனியில், பிரிட்டிஷாரின் மேற்பார்வையிலே இருக்கும் பகுதியில், ஒருமுறை, இப்போது கையாளப்படுகிறது. கல்விமந்திரியார், அதனை வேண்டுமானல் இங்கு கையாண்டு பார்க்கலாம்.

ஜெர்மன் நகர்கள் இடிந்தகட்டடக்குவியல் இன்று. இந்நிலையில் ஆசிரியர்களும் தேவையான அளவு இல்லை, எனவே— அங்கு, படிப்புக்கான வசதியைப்போதுமான அளவு செய்துதர முடியவில்லை. அதற்காகக் கையைவிரித்துவிடவுமில்லை அதிகாரிகள். புதிய முறையில் படிப்பைப் பரப்புகிருர்கள்.

ஒவ்வோர் ஊரிலும் ரேடியோ பள்ளிக்கூடம் அமைத்திருக்கிருர்கள். அதாவது, அந்தந்த இடத்திலே, மாணவர்கள் திரட்டப்பட்டு, பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது, ஆசிரியர் அங்கு இல்லை—அவர் எங்கோ இரு
கிருர்— அங்கு இருந்துகொண்
ரேடியோமூலம் வகுப்புக
நடத்துகிருர். ஒரு ஆசிரிய
பல ஆசிரியர்களாகிவிடுகிருர்
இது முழுவதும் சரியான தி
டம் என்று நாம் கூறிவிடவில்
—இன்றைய அவசரநிலைமைக்
இது தக்கதிட்டமாகிறது.

கிராமங்களில் உள்ள வ
களுக்கு, சர்வகலாசாலைப் படி
பல்ல, சாதாரணப்படிப்பை
ரேடியோ பள்ளிக்கூட மூல
தர ஏற்பாடு செய்யலாம்.

உண்மையான கிராம சர்
கலாசாலை, நாம் முன்பு கூறியு
ளபடி, பணிபுரியும் நோக்
கொண்டவர்களைப் பேராசிரி
களாகக்கொண்டு, ஊரெங்
உலவி, பட்டி தொட்டிகளிலு
பகுத்தறிவைப்பரப்பி, பயத்தை
போக்கி, பரந்த மனேபாவம்
படும்படிச்செய்து, புதிய சமு
யத்தைச் சிருஷ்டிக்கும் காரிய
தைச்செய்வதாக இருக்கவே
டும். அதற்காகவே, சமுதாய
திருத்தக்காரியத்தைக் கவனி
ஒரு தனி மந்திரியார் நியமிக்
படவேண்டும் என்று கூறு
ரேம்—திட்டமாகக் கூறிவி
கிரேம், தப்பெண்ணம் கொ
ளாதிருக்க வேண்டுமென்பத
காக – நியமிக்கப்படும் மந்
திராவிடர் கழகத்தாராக இரு
வேண்டாம்—காங்கிரசாரே வர
டும்— ஆனல் அப்படிஒருமந்
ஏற்படட்டும்-நாடு சீர்படட்டு

★


"அல்லாமா இக்பால்"

R. P. M. கனி பி. ஏ. பி. எ

எழுதியது.

விலை ரூ 1—8—0

தபால் செலவுதனி

விவரங்களுக்கு:—

R. P. M. கனி;

33 எர்ரபாலுசெட்டித்தெ

ஜி. டி., சென்னை.


## 1904 மனப்பான்மை

"ஸ்ரீ பிரகாசத்தின் ஆலை
கொள்கை குறித்து நான் வரு
துகிறேன். மில்நூல், கத
இருக்குமிடம் தெரியாமல் செ
யும என்ற அச்சம், 1904ம் வ
ஷத்தில் ஜட்காவண்டிக்காரர்க
டிராம் வருவதால் தங்கள் ஜீ
னம் போய்விடுமென்று அஞ்சி
தற்கு ஒப்பாகஇருக்கிறது. இ
னும்ஜட்கா இருப்பதுபோ
கதரும் கிருஷிகர்களது உ
தொழிலாக இருந்து வரு
தற்கு உகந்த தொழிலா
இருக்கும். ஆலைகளி
வேலையை ராட்டினம் ஒ
போதும் செய்யமுடியாது
விஞ்ஞான சாஸ்திரம், நா
ரிகம், இவற்றை நாம் நி
கரிக்கமுடியாது"

திரு. வி. கலியாணசுந்தரனு
20–10–46 சொற்பொழிவு,
துடியாத்த




கிளி மார்க்
பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராஜன் அண்ட் கம்பெனி,
தபால்பெட்டி நெ. 155.
மையவண்ணாரப்பேட்டை, சென்னை.


Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram